பக்கங்கள்: 11

விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 30 புதன்கிழமை 13.04.2022 கதிர் 159

இது ரகசியம் அல்ல!

அவர் இப்போது ஒரு மாகாண ஆளுநர். முன்னர் தலைநகர் தலைமகனாக இருந்த அரசியல்வாதி. ஆனாலும் நீண்டகாலம் முன்பிருந்தே எனது மதிப்புக்குரிய நண்பர். தம்மைத் தாக்கி நான் செய்தி எழுதினாலும் கூட அதை நடுநிலையோடு

2

# தேசிய அரசு வந்தாலும் அதில் கூட்டமைப்புப் பதவி ஏற்காது!

## சுமந்திரன் திட்டவட்டம்



(வவுனியாச் செய்தியாளர் கி.வசந்தரூபன்)

வவுனியா,ஏப்ரல்13

"தேசிய அரசாங்கம் ஒன்று வந்தால் அதில் நாங்கள் (கூட்டமைப்பு) அமைச்சுப் பதவியை ஏற்பதற்கான சந்தர்ப்பங்கள் எவையும் இல்லை. அவ்வாறான ஒரு தேவை ஏதும் இப்போது இருப்பதாகவும் நாங்கள் கருதவில்லை."

- தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

2

## தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு வவுனியாவில் நேற்றுக் கூடி ஆராய்வு



வவுனியா,ஏப்.13

நாட்டின் தற்போதைய அரசியல் நிலமை தொடர்பில் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு அவசர கலந்துரையாடல், நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பாக தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு வவுனியாவில் நேரற்றுக் கூடி கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டது.

03

## ஏப்ரல் 18ஆம் திகதி புதிய அமைச்சரவை

புதிய அமைச்சரவை எதிர்வரும் 18ஆம் திகதி நியமிக்கப்படவுள்ளது என அரச வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

சர்வதேசநாணயநிதியத்துடன்பேச்சுநடத்துவதற்காக இலங்கை பிரதிநிதிகள் குழு, எதிர்வரும் 18 ஆம் திகதி அமெரிக்கா நோக்கிப் புறப்படவுள்ளனர்.

எனவே, இலங்கையில் நிலையானதொரு அரசுள்ளது என்பதைக் காண்பிப்பதற்காகவே 18ஆம் திகதி முழு அமைச்சரவை நியமிக்கப்படவுள்ளது என அந்த வட்டாரங்கள் கூறின.

## தமிழ்த் தேசிய மே தினம் வடக்கிலும் கிழக்கிலும்!

### கிளிநொச்சியிலும், மட்டக்களப்பிலும்

"இலங்கைத் தமிழரசுக் கட்சி இம்முறை மே தினத்தை வடக்கில் கிளிநொச்சியிலும், கிழக்கில் மட்டக்களப்பிலும் கொண்டாடவுள்ளது. அது தமிழ்த் தேசிய மே தினமாக நடத்தப்படும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளும் அதில் கலந்து கொள்வார்கள் என நாங்கள் எதிர் பார்க்கின்றோம்."

– இவ்வாறு தகவல் வெளியிட்டார் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற

03

## ராஜபக்ஷக்களின் ஆட்சிக்கு எதிராக நாங்களும் வீதியில் இறங்குவோம்



### சு.க. பகிரங்க எச்சரிக்கை

மஹிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக ஏற்க முடியாது. நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கி, ராஜபக்ஷக்கள் ஆட்சி அமைக்க முற்பட்டால் அந்த ஆட்சிக்கு எதிராக வீதியில் இறங்குவோம்.

– இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர எம்.பி. எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று

03

## ஈஸ்டர் தாக்குதல் சம்பவம்: இதுவரை 735 பேர் கைது!

### பாதுகாப்பு அமைச்சு தகவல்



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் இதுவரை 735 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் தொடர்கின்றன.

– இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர்

03

## இந்திய மீனவரின் மீன் பிடிக்கான தடை நாளை முதல் 61 நாள்கள்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்ஏப்.13

இந்தியாவில் விசைப் படகுகளிற்கான மீனபிடி அனுமதிக் காலம் முடிவுற்று நாளை முதல் 61 தினங்களுக்கு தடைக் காலம் ஆரம்பமாகின்றது.

இந்தியாவில் வருடாந்தம் ஏப்பிரல் மாதம் 15 ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 15 ஆம் திகதிவரை மீன்கள் பெருகும் காலமாகக் கணித்து அந்த நாள்களில் விசைப்படகுகளில் மீன் பிடிக்கவும் தடை விதிக்கப்படுகின்றது.

03

## வெளிநாட்டு கடன் மீளளிப்பை இடைநிறுத்தியது இலங்கை!

நிலுவையில் உள்ள சாதாரண வெளிநாட்டு கடன் மீள்செலுத்துகையை குறுகிய காலத்துக்கு இடைநிறுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நிதியமைச்சின் செயலாளர் விடுத்துள்ள அறிவித்தலில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 2022 ஏப்ரல் 2ஆம் திகதி வரையிலான கடன் நிலுவைகளே இடைநிறுத்தப்படவுள்ளன என நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தால் ஆதரிக்கப்படும் பொருளாதார சீரமைப்பு திட்டத்திற்கு இணங்க

03

## சுசில் பிரேமஜயந்தவுக்கும் வலை விரிக்கின்றது அரசு

### அமைச்சுப் பதவியும் தயார்நிலையில்



நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படபோவதாக அறிவிப்பு விடுத்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவுக்கும் ஆளுங்கட்சி வலை விரித்துள்ளது எனத் தகவல் வெளியாகியுள்ளது.

நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக இயங்க முடிவு செய்த அணி

03

## றம்பொடை நீர்வீழ்ச்சியில் நீராடுவதற்குச் சென்ற 7 வவுனியா இளைஞர்களில் மூவரைக் காணோம்!

### பொலிஸ் உயிர் காக்கும் படை நால்வரை மீட்டது

கொத்மலை,ஏப்.13

கொத்மலை, றம்பொடை நீர்வீழ்ச்சியில் நீராடச்சென்ற மூன்று இளைஞர்கள் காணாமல் போயுள்ளனர். இந்த மூன்று இளைஞர்களையும் தேடும் நடவடிக்கையில் பொலிஸ் உயிர் காக்கும் படையினர் நேற்று மாலை ஈடுபட்டிருந்தனர்.

வவுனியாவில் உள்ள ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் ஊழியர்களே இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.

நேற்று முன்தினம் நுவரெலியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இவர்கள், வவுனியாவுக்குத் திரும்பிக்

03

## இனி இது .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்றுக் கொள்ளும் பிரமுகர். நேற்று இரவு திடீரென நீண்ட காலத்தின் பின்னர் அழைப்பு எடுத்தார். எடுத்த எடுப்பில் ஒரு கேள்வி கேட்டார்.

"பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் சுமந்திரனுக்கும் இடையில் நேற்றிரவு (திங்கள் இரவு) சந்திப்பு நடந்ததா?" – என்று கேட்டார்.

"ஆம். உண்மைதான். நடந்தது." – என்று நான் பதிலளித்தேன்.

அடுத்து, அவர் கேட்ட கேள்வி என் னைத் தூக்கி வாரிப் போட்டது.

"இந்தச் சந்திப்பு உங்களுக்கு ஊடா கத்தான் நடந்ததா? நீங்களா ஏற்பாடு செய்தீர்கள்?" – என்றார் அவர்.

"ஐயையோ... இல்லவே இல்லை. இருவரும் சந்திக்க இருக்கின்றார்கள், சந்திப்பு நடக்கும் என்பவையெல்லாம் எனக்குத் தெரிந்திருந்தன என்பது உண்மை தான். அதன் சாத்தியங்கள் குறித்து சம்பந்தப்பட்ட தரப்புகளில் இருந்து என்னிடம் கருத்துக் கேட்கப்பட்டது என்பதும் வாஸ்தவம்தான். ஆனால் எனக்கும் அந்தச் சந்திப்புக்கும் நேரடித் தொடர்பேது மில்ல" – என்றேன் நான்.

"இல்லை, இங்கு கொழும்பு அரசியல் வட்டாரங்களில் அப்படித்தான் பேசிக் கொள்கின்றார்கள். உங்கள் பெயர் தான் அடிபடுகிறது. அதுதான் கேட்டேன்" – என்றார் அவர்.

"அப்படிச் சிலர் கருதுவதற்குக் காரணம் உண்டு. இத்தகைய சில முக்கிய சந்திப்புகளில் நான் முன்னர் சம்பந்தப்பட்டு இருந்தேன் என்பது பலருக்கும் தெரிந்த விடயம்தான். சந்தித்த இருவருமே நான் பேசிப் பழகக் கூடிய – ஊடா டக் கூடிய – பிரமுகர்கள்தான். அத்தோடு இரவு நடைபெற்ற சந்திப்பின் உள்விவகாரங்கள், விவரமான செய்தியாக விடிகாலையில் எங்கள் பத்திரிகையில் தான் வெளியாகி இருந்தன. அதனால் கூட்டிக் கழித்துப் பார்த்து அப்படி தீர்மானித்திருக்கிறார்கள் போலும். ஆனால் அது தவறு. எனினும் ஒரு விடயத்தை சொல்கிறேன். இந்தச் சந்திப் புக்குக் கால்கோளிட்டவர் அல்லது மூலம் இன்னொரு தமிழ் எம்.பிதான்" – என்றேன்.

எனினும் அந்த எம்.பி. யார், எவர் என்ற விவரங்களை நான் அவருக்குச் சொல்லவில்லை. இன்று வாசகரளோடும் பகிர விரும்பவில்லை.

பிரதமருக்கு நெருக்கமான ஒருவருடன் ஊடாடிய அந்தத் தமிழ் எம்.பி., இப்படியான நெருக்கடி சமயத்தில் சரியான ஆலோசனை பெறவும், தமிழ் தரப்புகள் மற்றும் இராஜதந்திரத் தரப்புகள் உட்பட பிற தரப்புகளினதும் கருத்துக்களைப் பிரதமர் அறியவும் சுமந்திரன்தான் பொருத்தமானவர், அவருடன் ஒரு சந்திப்பை மேற்கொள்ளும்படி பிரதமரைக் கூறுங்கள் என்று ஆலோசனை சொல்லியிருக்கின்றார். சம்பந்தப்பட்டவர் உடனேயே பிரதமரை நெருங்கி விடயங்களை அவர் காதில் போட்டிருக்கின்றார்.

தாமதமின்றி உடனேயே சுமந்திரனுடன் தனக்கு ஒரு சந்திப்பை ஏற்படுத்தித் தருமாறு அவரைப் பணித்திருக்கின்றார் பிரதமர். நேற்று முன்தினம் (திங்களன்று) பிற்பகலில் அவர் சுமந்திரனைத் தொடர்பு கொண்டார்.

"பிரதமர் உங்களைச் சந்திக்க விரும்புகிறார். சந்திப்பீர்களா? இந்தச் சமயத்தில் பிரதமரை சந்திப்பது உங்களுக்கு நெருக்கடி என்றால் வேண்டாம்" என்று இழுத்திருக்கின்றார் அவர்.

"எனக்கு யாரையும் சந்திக்கவும் பேசவும் கலந்துரையாடவும் நெருக்கடி ஏதும் இல்லை. சந்திக்க மாட்டேன் என்று கூறுவதற்கு என்னிடம் காரணமும் இல்லை" – என்றார் சுமந்திரன். மடியில் கனம் இருந்தால்தானே வழியில் பயமோ சந்திப்பில் பின்னாடிப்போ இருப்பதற்கு என்ற மாதிரி இருந்ததது அந்தப் பதில்.

"அப்படியானால் நாளை (அதாவது நேற்று செவ்வாய்க் கிழமை) சந்திக்கலாமா?" – என்று கேட்டார் பிரதமரின் பிரதிநிதி.

"இல்லை. வவுனியாவில் எங்கள் கட்சியின் அரசியல் குழுக்கூட்டம் நாளை (நேற்று) நடக்கிறது. காலையில் நேரத்துடன் நான் வவுனியாவுக்குப் புறப்பட்டு விடுவேன். சில தினங்கள் யாழ்ப்பாணத்தில் நிற்பேன்" – என்றார் சுமந்திரன்.

"ஆமாம். பிரதமரும் நாளை (செவ்வாய்) மாலை புது வருடத்திற்கு ஊருக்கு – அம்பாந்தோட்டைக்கு – புறப்பட்டு விடுவார். எனவே இன்று இரவு சந்திக்கலாமா? குறுகிய நேர முன்னறிவித்தலில் சந்திப்பதில் உங்களுக்குப் பிரச்சினையில்லையா?" – என்று கேட்டார் பிரதமரின் பிரதிநிதி. "அதற்கென்ன வருகிறேன்" என்று கூறிய சுமந்திரன், பிரதமரை அன்று இரவு 7.30 மணி முதல் 8.30 மணி வரைச் சந்தித்தார். இருவர் மட்டும்தான். சந்திப்பின் முழு விவரங்களும் நேற்று எமது பத்திரிகையில் விலாவாரியாக வந்துள்ளன.

நேற்றுக் காலை சந்திப்பை ஏற்பாடு செய்த தமது பிரதிநிதியை அழைத்து முழு திருப்தி தெரிவித்தார் பிரதமர்.

"நல்ல சந்திப்பு. வெளிப்படையாக – நேர்பட – பேசுகின்றார். தமிழர் தரப்பில் சம்பந்தனைப் போல மேதாவிசாலமும், சட்ட அறிவும், யதார்த்தமும் புரிந்த தலைவர். இந்த ஆலோசனைகள் எமக்கு நன்கு உதவும். தொடர்ந்து அடிக்கடி அவரைச் சந்தித்தால் நமக்குப் பலன் கிட்டும். அவர் கூறிய ஆலோசனைகளை ஜனாதிபதிக்கு இன்று நேரில் தெரிவிப்பேன். அதற்காக ஜனாதிபதியை சந்திக்கச் செல்கிறேன்" என்ற சாரப்பட நேற்றுக் காலையில் குறிப்பிட்டாராம் பிரதமர். வெளிப்படையாகப் பேசும் சுமந்திரனின் அரசியல் பண்பியல்பு அரசியலில் அதிக பட்டறிவுமிக்க மஹிந்தரின் சிந்தனையில் ஒரு மாற்றத்தை கொண்டு வரும் என்றால் நல்லது தானே.

தென்னிலங்கை அரசியலில் இன்று ஏற்பட்டுள்ள அரசியல் பூகம்பத்துக்கு மத்தியில், எல்லாத் தரப்புகளுடனும் நேர்படவும், அறிவுபூர்வமாகவும், வெளிப்படையாகவும் பேசும் நடுநிலைப் பிரதிநிதி சுமந்திரன்தான். மற்றைய தரப்பினர் போல இந்த நெருக்கடியில் இடையில் புகுந்து அமைச்சுப் பதவியோ, தனிப்பட்ட அரசியல் லாபமோ ஈட்ட விரும்பாத பிரமுகர். சட்டப் புலமையும், மொழி வன்மையும் மிக்கவர். எல்லாத் தரப்புகளினாலும் மதிக்கப்படுபவர். இப்போதைய தென்னிலங்கை அரசியல் குழப்பங்களுக்கு எல்லாத் தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய கிஸிங்கர் அவர்தான். அப்படி நான் குறிப்பிட்டதும், கிஸிங்கர் யார் என்று நீங்கள் கேட்பது புரிகிறது.

ஹென்றி கிஸிங்கர் ஜேர்மனியில் பிறந்த அமெரிக்க அரசியல் தலைவர். 1969 இல் அமெரிக்க தேசியப் பாதுகாப்பு ஆலோசகராகவும் 1973 இல் அமெரிக்க வெளிவிவகார அமைச்சராகவும் அவர் ஆற்றிய பணி அளப்பரியது. சர்வதேச ராஜதந்திர ஊடாட்டங்கள், உறவாடல்களில் விற்பன்னராகத் திகழ்ந்தவர். 1969 – 1977 காலப் பகுதியில் அமெரிக்க அரசியல் கொள்கையைத் தீர்மானிப்பதில் பிரதான சூத்திரதாரியாக விளங்கியவர். வியட்நாமில் யுத்தத்தை நிறுத்தி, சமரசத்தை ஏற்படுத்தியமைக்காக நோபல் சமாதானப் பரிசு பெற்றவர். சீனாவுடன் அமெரிக்கா இராஜதந்திர உறவை மீள ஆரம்பிக்க வைத்தவர். வியட்நாம் தலையீட்டிலிருந்து அமெரிக்காவை விடுவிக்கும் பாரிஸ் ஒப்பந்தத்தின் பிதாமகர் இவரே. எனினும் பங்களாதேபைப் பிரிக்க பாகிஸ்தானோடு இந்தியா யுத்தம் புரிந்த போது பாகிஸ்தானுக்கு அமெரிக்கா ஆதரவு வழங்கியமை உட்பட பல சர்ச்சைக்குரிய இராஜதந்திர நகர்வுகளை அவர் முன்னெடுத்து இருந்தாலும், சர்வதேச இராஜதந்திர உறவுகளில் பலதரப்புகளையும் சமரசம் செய்யும் தந்திரோபாயத்தை கிஸிங்கர் பாணி என்று போற்றும் நிலையை ஏற்படுத்தியவர்.

அவரைப் போலவே சமரசத் திறமையும், அறிவும், அரசியல் ஞானமும், வாத வாண்மையும், அதே மாதிரி அரசியல் செயற்பாடு முழுவதிலும் சர்ச்சையிலும் சிக்கியவரான சுமந்திரன், இலங்கை அரசியல் புயலுக்கு பல தரப்புகளையும் இணங்கச் செய்யும் நியாயமான உடன்பாட்டுக்கு வழி சமைக்கக் கூடிய கிஸிங்கர்தான். அது பிரதமருக்கும் புரிகின்றது. பயன்படுத்துவதும் பயன் படுத்தாதும் தென்னிலங்கை அரசியல் தலைமைகளைப் பொறுத்தது.

சுமந்திரனின் திறமை, தகுதியை ஒரு பார்வையாளனாக நின்று, நான் முன்னிறுத்தி வெளியிட்டமைக்காக இன்று முகப் புத்தகங்களில் என் மீதுதான் வசைபாடல்கள், சேறுவாரல்கள் எல்லாம் தாராளமாக இருக்கும். அவையும் நல்லதுக்குத்தான் என்று பார்த்து ரசிப்போம்.

**- மின்னல் -**

## தேசிய அரசு வந்தாலும் அதில் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியாவில் நேற்று நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தின் பின் இடம் பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கு அரசாங்கம் தானே முன்வர வேண்டும் எனத் தாம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆலோ சனை கூறினார் என்ற தகவலையும் அவர் அங்கு வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஒரு கொந்தளிப்பான அரசியல் நிலைமை காணப் படுகின்றது. இந்த நிலைமை தொடர்பில் ஆராய்வதற்காக எமது கட்சியின் அரசியல் உயர் மட்ட குழு கூடியது.

இந்த அரசியல் கொந்தளிப்புக்கு அடிப்படைக் காரணம் பொருளாதார வீழ்ச்சி. எப்படியாக இலங்கையி னுடைய பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது? இதற்கான காரணிகள் என்ன? இனி என்ன மாதிரியாக இந்த நிலைமை மாறப் போகிறது? – என்பன குறித்து நீண்ட நேரமாகக் கருத்துப் பரிமாற்றம் செய்தோம்.

சரித்திரத்தில் இல்லாத அளவுக்கு மோசமான பொருளாதார வீழ்ச்சி ஒன்று நாட்டில் ஏற்பட்டுள்ளது. இதனால் பாரிய பக்க விளைவுகளை எமது மக்கள் எதிர்நோக்க வேண்டிய நிலையும் வந்திருக்கிறது. இந்த நிலையில் வடக்கு – கிழக்கில் வாழும் தமிழ் மக்களுடைய பிரதான அரசியல் கட்சியாக நாங்கள் எனன விதமான தலைமைத்துவத்தைக் கொடுக்க வேண்டும், மக்களுக்கு என்ன மாதிரியான ஆலோசனைகளைக் கொடுக்க வேண்டும், பொருளாதார வீழ்ச்சியினால் ஏற்பட்டுள்ள அரசியல் கொந்தளிப்பு நிலையில் என்ன மாதிரியாக நடந்து கொள்ள வேண்டும் என்பன பற்றி மிகவும் ஆழமாகப் பேசியிருந்தோம்.

இந்தப் பொருளாதார நிலைமை காரணமாக இன் னும் மோசமான நிலைக்கு நாடு தள்ளப்படுவதற்கான சூழல் தான் காணப்படுகின்றது. அது எமது மக்களின் இயல்பு வாழ்க்கையை வெகுவாக பாதிக்கப் போகிறது. அவர்களது பொருளாதார நிலமையையும் பாதிக்கப் போகிறது. அதற்கு மாற்று வழிகளாக பல யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. வீட்டுத் தோட்டம் தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டியுள்ளது. இது எங்களது மக்களுக்குப் புதிதான விடயமல்ல. இருப்பினும் மக்கள் தயாராக இருக்க வேண்டும். அரசியல் தலைவர்கள் என்ற வகையில் அவர்களுக்கான வழிகாட்டுதல்களை நாங்கள் கொடுப்போம். எங்கள் பொருளாதார நிபுணர்கள் ஊடாக அது தொடர்பில் கலந்துரையாடுகின்றமையுடன், எமது அடுத்த மட்டப் பிரதிநிதிகள், செயற்பாட்டாளர்கள் ஆகியோருக்கும் இது தொடர்பில் தெளிவுபடுத்துவது எனவும் தீர்மானித்துள்ளோம்.

இன்று அரசாங்கம் ஒன்று இல்லாத நிலைமை காணப்படுகின்றது. அமைச்சரவை என நான்கு பேர் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார்கள். அதில் ஒருவர் உடனடியாக இராஜினாமாச் செய்தார். நிதி அமைச்சர் இல்லாத நாடு என நாங்கள் நினைத்துக் கொண்டிருந்த போது அவர் நாடாளுமன்றத்தில் பேச எழுந்தார். அப்போது நீங்கள்தானா தற்போது நிதி அமைச்சர் என அவரிடம் நான் கேள்வி கேட்டேன். ராஜினாமா செய்து விட்டு, தானே நிதி அமைச்சர் என அவர் சொன்னார். அவ்வாறு அவர் சொன்ன போது அவருடன் கூட இருந்தவர்கள் எல்லோரும் வியப்பாக அவரைத் திரும்பிப் பார்த்தார்கள். ஏனெனில் இப்பொழுது அவர்தான் நிதி அமைச்சர் என்பது அவர்களுக்கே தெரியாது. இப்படியாக நாடு தத் தளித்துக் கொண்டிருக்கின்றது.

சர்வதேச நாணய நிதியத்துடன் உடனடியாகச் சென்று பேச வேண்டும். கடன் கொடுத்த நாடுகள், அமைப்புக்களுடன் பேச வேண்டும். அமைச்சரா, இல்லையா என்று புரியாத நிலையில் உள்ளவர்தான் போய்ப் பேசப்போகிறார். சர்வதேச நாணய நிதியமும், மற்றைய நாடுகள், அமைப்புக்களும் உதவிக்கு முன் வருவதாக இருந்தால் கூட நாட்டில் ஓர் அரசியல் ஸ்திர தன்மை இல்லாமல் அவர்கள் அந்த செயற்பாட்டுக்குள் வரமாட்டடார்கள். ஆகவே அரசியல் ஸ்திரதன்மையை உருவாக்குவது அத்தியாவசியமான செயற்பாடு. அதற்கு உகந்த வகையில் ஜனாதிபதியோ, பிரதமரோ செயற்படுபவர்களாகத் தெரியவில்லை.

கடந்த சில நாள்களாக நான் கொழும்பில் இருந்த காரணத்தினால் பல்வேறு தலைவர்களுடன் பல கலந்துரையாடல்களில் பங்குபற்றியிருக்கிறேன். எதிர்வரும் நாள்களில் பிரதான எதிர்கட்சியினர் சில முன்னெடுப்புக்களைச் செய்ய உள்ளார்கள். அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை, ஜனாதிபதிபக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணை, நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஒழிப்பதற்கான சட்டப் பிரேரணை உட்பட பல விடயங்களை முன்னெடுக்கவுள்ளார்கள். இது தொடர்பில் ஆராய்ந்தோம்.

நாட்டில் இளைஞர்களாகச் சேர்ந்து தன்னெழுச்சியாக முன்னெடுக்கப்படும் போராட்டங்கள் அரசியல்வாதிகள் இல்லாமலேயே நடத்தப்படுகின்றன.

எமது பகுதிகளிலும் சில போராட்டங்கள் முன்னெடுக் கப்பட்டுள்ளன. ஆகவே மக்கள் ஆர்வமாக உள்ளார்கள்.

இந்த மூன்று பிரேரணைகள் தொடர்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பாக ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டி வரும். அந்தத் தீர்மானங்களைப் பங்காளிக் கட்சிகளுடன் சேர்ந்து கலந்துரையாடி உத்தியோக பூர்வமான தீர்மானங்களாக எடுப்போம். எமது மக்கள் மத்தியிலும் இந்த அரசாங்கத்திற்கு எதிர்ப்பு ஏற்பட்டு வருகிறது. இன்று எமது கூட்டத்தில் பேசப்பட்ட விடயங்களை எமது கட்சி தலைவர் (மாவை சேனாதிராசா) பங்காளிக் கட்சி தலைவர்களுக்குத் தெரியப்படுத்துவார்.

தேசிய அரசாங்கம் வந்தால் நாங்கள் அமைச்சுப் பதவியை ஏற்பதற்கான சந்தர்ப்பங்கள் இல்லை. அவ்வாறான ஒரு தேவை ஏதும் இப்போது இருப்பதாக நாங்கள் கருதவில்லை.

இந்தப் பொருளாதார வீழ்ச்சிக்கு மாறி மாறி வந்த அரசாங்கங்களே காரணம். மிகவும் முக்கிய காரணம் 30 வருடத்திற்கு மேலாக ஒரு போரை நடத்தியமை. அதற்காகக் கண்மூடித்தனமாக எல்லா நாடுகளிடமும் கடன் வாங்கினார்கள். அதற்கு மாறி மாறி வந்த அர சாங்கங்கள் பொறுப்பு. இறுதியாக தவறு ஏற்பட்டது இந்த ஜனாதிபதியின் காலத்தில்தான். இதனைச் சீர்செய்ய வேண்டிய பொறுப்பு அவர்களிடத்தில் உள்ளது. இதில் நாம் பொறுப்பில்லாதவர்களாகச் செய்யற்பட முடியாது. இதனுடைய தாக்கம் எங்களது மக்களுக்கும் மோசமாக அமையப் போகிறது. அவ்வாறு எமது மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் நாம் செயற்பட வேண் டும். அதற்குத் தேவையான ஆதரவை இடைக்கால அரசாங்கதற்குக் கொடுக்க வேண்டுமாக இருந்தால் அப்போது அதற்கான முடிவை எடுப்போம். ஆனால், அமைச்சரவையில் நாங்கள் சேர்ந்து இயங்க வேண்டிய தேவை ஏற்படவில்லை.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களை தமிழ் தேசியக் கூட்டமைப்பாக நான் சந்திக்கவில்லை. அவர் என்னை சந்திக்கக் கேட்டிருந்தார். அதனடிப்படையில் இரவு அவரை தனியாகச் சந்தித்துப் பேசியிருந்தேன். அரசமைப்புத் தொடர்பாக பல பிரச்சினைகள் எழுத்துள் ளன. ஜனாதிபதிக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணை, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை ஒழிப்பு எனப் பல விடயங்கள் பேசப்படுகின்றன. பல கட்சித் தலைவர்கள் என்னுடன் பேசுகிறார்கள். இலவசமாக சட்ட ஆலோசனை பெறுகிறார்கள் என நான் யோசிகின்றேன். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் தொலைபேசியில் என்னுடன் பேசினார். முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையாரும் தொலைபேசியில் காலையில் பேசியிருந்தார். வேறு தலைவர்கள் பலர் பேசுகிறார்கள். சட்ட நிலைப்பாடு தொடர்பாகவும் அறிகிறார்கள். அரசியல் நிலையை ஸத்திரத்தன்மைக்குக் கொண்டு வருதல் தொடர்பாக நடைபெறும் பேச்சுக்களிலும் நான் கலந்து கொண்டு வருகின்றேன்.

பிரதமர் மஹிந்த அவர்களுக்கு நான் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கான யோசனையை அரசாங்கமே கொண்டு வந்தால் சில விடயங்களில் முன்னேற முடியும் என ஆலோசனை வழங்கியுள்ளேன். – எனத் தெரிவித்தார்.

# மருத்துவ பீடத் துறைத் தலைவர் பேராசிரியர் பாலகுமாரன் மறைவு



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் முன்னாள் பீடாதிபதியும், உயிர் இரசாயனவியல் துறைத் தலைவருமான பேராசிரியர் எஸ். பாலகுமாரன் இயற்கை எய்தினார்.

யாழ்ப்பாணம் உடுப்பிட்டியைச் சேர்ந்த பேராசிரியர் எஸ். பாலகுமாரன் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவராவார். யாழ்ப்பாணப் பல்கலைக் கழக உயிர் இரசாயனவியல் துறையின் விரிவுரையாளராக இணைந்து கொண்ட இவர், சிரேஷ்ட விரிவுரையாளராக கடமையாற்றிய அதே வேளை 2012 ஆம் ஆண்டு முதல் மருத்துவ பீடத்தின் 9ஆவது பீடாதிபதியாகப் பதவி வகித்தார்.

இவர் பீடாதிபதியாகப் பதவி வகித்த காலத்தில் மருத்துவ பீடத்துக்கென அதிநவீன வசதிகளைக் கொண்ட ஹூவர் கலையரங்கம் 2014 ஆம் ஆண்டு சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டதுடன், அதே ஆண்டில் மருத்துவ பீட பரீட்சை மண்டபமும் திறந்து வைக்கப்பட்டது.

மருத்துவக் கல்வி மற்றும் வைத்தியத் தேவைகளுக்காக தற்போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அண்மையாக அமைக்கப்பட்டுவரும் ஐந்து மாடிகளைக் கொண்ட கட்டடத்துக்கான காணியை நன்கொடையாகப் பெற்றுக் கொடுப்பதில் இவர் பெரும் பங்காற்றியிருந்தார்.

கற்பித்தல் நடவடிக்கைகளுக்கப்பால் மாணவர்களைச் சிறந்த முறையில் வழிகாட்டுவதிலும், தனது நிர்வாகத் திறனினூடாக மருத்துவ பீடத்தைத் தரமுயர்த்துவதிலும் பெரும் பங்காற்றி இருக்கிறார்

2019 ஆம் ஆண்டு இவருக்குத் திறமை அடிப்படையில் உயர் இரசாயனவியலில் பேராசிரியராகப் பதவியுயர்வு வழங்கப்பட்டது.

இவரது மறைவு மருத்துவத்துறையில் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணைவேந்தர், மருத்துவ பீடாதிபதி, முன்னாள் பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள் மற்றும் வைத்தியர்கள் பலர் இவரது மறைவு குறித்துத் தமது இரங்கல்களை வெளியிட்டுள்ளனர்.

## தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு .............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழரசுக்கட்சியின் வவுனியா அலுவலகமாகிய தாயகத்தில் காலை 11 மணிக்கு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் கூடிய அரசியல் குழு சந்திப்பு மாலை 4 மணி வரை நீடித்தது..

குறித்த சந்திப்பில் மாவை சேனாதிராஜா, நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், சி. சிறிதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், கலையரசன், கட்சியின் செயலாளர் வைத்தியர் ப.சத்தியலிங்கம், துரைராசசிங்கம் சி.வீ.கே. சிவஞானம், நிர்வாகச் செயலாளர் எக்ஸ். குலநாயகம், செல்வராஜா ஆகியோர்ர கலந்து கொண்டிருந்தனர்.

அரசியல் குழு உறுப்பினர்களான இரா. சம்பந்தன், சட்டத்தரணி கே.வி.தவராஜா ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

அரசியல் குழுவில் இல்லாத நாடாளுமன்ற உறுப்பினர்களான சார்ள்ஸ் நிர்மலநாதன், சாணக்கியன் இருவரும் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டனர். எனினும் சாணக்கியன் கூட்டத்தில் பங்குபற்றவில்லை. இந்தக் கூட்டத்தில் தற்போதைய அரசியல் நிலைமைகள் மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழரசின் அடுத்த கட்ட நகர்வுகள், பொது மக்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் தொடர்பில் ஆராயப்பட்டது.

கட்சியின் மத்தியகுழுவை விரைந்து கூட்டவும் முடிவு செய்யப்பட்டது.

## தமிழ்த் தேசிய மே ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினருமான சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு கூட்டத்தின் பின்னர் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

## ஈஸ்டர் தாக்குதல் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டின்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:–

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் உரிய வகையில் விசாரணை முன்னெடுக்கப்படவில்லை என முன்வைக்கப்படும் குற்றச்சாட்டை நிராகரிக்கின்றோம். இதுவரை உரிய வகையிலேயே விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. இனியும் முன்னெடுக்கப்ப டும்.

இதுவரை 735 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 196 பேர் தடுப்புக் காவலில் உள்ளனர். 81 பேருக்கு எதிராக மேல் நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி தாக்குதல் சம்பவம் தொடர்பில் பரந்துபட்ட விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது – என்றார்.

## இந்திய மீனவரின் மீன் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கமைய இன்று தொழிலிற்கு வரும் மீனவர்கள் நாளை முதல் 61 தினங்களிற்குக் கடலிற்குச் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும், இருந்தபோதும் நாட்டுப் படகுகளில் இக் காலத்தில் தொழிலில் ஈடுபடுவார்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விசைப் படகுகளிற்கான மீன்பிடித் தடைக் காலம் 2010ஆம் ஆண்டு முதலே ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் 45 தினங்களாகவும், கடந்த 2018முதல் அது 61 நாள்களாக நீடிக்கட்டதாகவும் தமிழ் நாடு மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

## ராஜபக்ஷக்களின் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வ றாறு எச்சரிக்கை விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:–

நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கி, அரசியல் கட்சிகளை கூறுபோடுவது ராஜபக்ஷக்களுக்குக் கைவந்த கலை. அந்தச் செயலை தற்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் செய்துள்ளார். இந்தச் செயலை அனுமதிக்க முடியாது.

பிரதமராக மஹிந்த வேண்டாம். அமைச்சரவைக்கு ராஜபக்ஷக்களும் வேண்டாம். உறுப்பினர்களை விலைக்கு வாங்கி புதிய ஆட்சியை ராஜபக்ஷக்கள் அமைத்தால் அந்த அரசுக்கு எதிராகப் போராடுவோம். அரசை முன்னெடுக்க இடமளிக்கமாட்டோம். சாந்த பண்டாரவையும் விலைக்கே வாங்கியுள்ளனர் – என்றார்.

## சுசில் பிரேமஜயந்தவுக்கும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அண்மையில் நடத்திய பேச்சில் சுசில் பிரேமஜயந்த பங்கேற்ற போதிலும் அதன்பின்னர் நடைபெற்ற சந்திப்புகளில் அவர் பங்கேற்கவில்லை. இந்நிலையிலேயே அவரை வளைத்துப்போடும் முயற்சியில் அரசு இறங்கியுள்ளது எனக் கூறப்படுகின்றது.

சுசில் பிரேமஜயந்த பச்சைக்கொடி காட்டினால், எதிர்வரும் 18ஆம் திகதி பதவியேற்கவுள்ள அமைச்சரவையில் அவர் இடம்பெறுவார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

அரசின் செயற்பாடுகளை விமர்சித்ததால், இராஜாங்க அமைச்சுப் பதவியில் இருந்து சுசில் பிரேமஜயந்த நீக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## றம்பொடை நீர்வீழ்ச்சியில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருந்த போது, நேற்றுப் பிற்பகல் றம்பொடை நீர்வீழ்ச்சிக்கு நீராடச் சென்றுள்ளனர்.

ஏழு இளைஞர்கள் இவ்வாறு சென்றுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

றம்பொடை நீர்வீழ்ச்சியில் ஒரே நேரத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தில் ஏழு இளைஞர்களும் அடித்துச்செல்லப்பட்டுள்ளனர்.

சம்பவ இடத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த உயிர் காக்கும் படையினர் நான்கு இளைஞர்களின் உயிரைக் காப்பாற்ற நடவடிக்கை எடுத்துள்ளனர்.

வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போன மேலும் மூன்று இளைஞர்களைத் தேடும் நடவடிக்கையில் பொலிஸ் உயிர் காக்கும் பிரிவினர் ஈடுபட்டுள்ளனர்.

றம்பொடை நீர்வீழ்ச்சியின் நீர்ப்பிடிப்பு பகுதியில் இன்று பிற்பகல் பெய்த கன மழை காரணமாக றம்பொட நீர்வீழ்ச்சியின் நீர்மட்டம் திடீரென அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## வெளிநாட்டு கடன் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம் -
076 443 8622






நாளை யாழ். அத்தியடி
பிள்ளையார் கோயில் தேர்த் திருவிழா
வசந்தமண்டப பூசை - காலை 8.00 மணி
தேருக்கு எம்பெருமான் எழுந்தருளல் - காலை 9.00 மணி
விளம்பர அனுசரணை - சிங்கப்பூர் ஜுவலறி
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் 077 2719372

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## நாட்டுக்குக் கடைசி வாய்ப்பு

**இந்த இலங்கைத் தீவின் பெரும் சாபக்கேடு பௌத்த, சிங்களப் பேரினவாத வெறிப் போக்கும் மேலாண்மை சிந்தனையும்தான்.**

**பல்லின, பல்மொழி, பல்கலாசார மக்கள் குழுங்களைக் கொண்ட இலங்கைத் தீவு ஒரு நாடாக மீண்டெழ முடியாமல் பிரிவினையும் முரண்பாடுகளும் குழப்பங்களும் நீடிப்பதற்கு ஒரே காரணம் இந்த மேலாதிக்க எண்ணப் போக்குதான்.**

**இந்த தீவு முழுவதும் பௌத்த, சிங்களவர்களுக்கு மட்டுமே உரியது என்ற வெறித்தனமான எண்ணம்தான் இந்தத் தீவை முப்பது வருடகால உள்நாட்டு யுத்தத்தில் மூழ்கடித்து, இரத்த ஆறை ஓட வைத்தது. பெரும் பின்னடைவுக்குள்ளும் மீளவே முடியாத வீழ்ச்சிக்குள்ளும் நாட்டை அதுவே ஆழ்த்தி நிற்கின்றது.**

**குறுக்கு வழியில் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற எண்ணும் சந்தர்ப்பவாத – பதவி வெறி கொண்ட – அரசியல் தலைமைகள் எப்போதுமே இனவாதத் தீயை மூட்டி அதில் அரசியல் குளிர் காய்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.**

**பேரினவாத வெறியைக் கிளப்பி, அதில் அரசியல் லாபமீட்டும் தந்திரோபாயத்தில் கைதேர்ந்தவர்கள் ராஜபக்ஷக்கள். பதவி வெறி பிடித்த அந்தக் குடும்ப ஆட்சி பீடத்தின் இத்தகைய குறுக்குவழி நடவடிக்கைகளுக்கு – செயற்பாடுகளுக்கு – இலங்கைத் தீவு காலம்காலமாகப் பலியாகி வருவதுதான் அதன் துரதிஷ்டம்.**

**கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும், பின்னர் பொதுத் தேர்தலிலும் கூட, அந்த இனவெறி குரூரப் பண்பியல்புதான் கட்டவிழ்ந்தது. ராஜபக்ஷக்களின் பேரினவாத வெறிப் பிரசாரம் தென்னிலங்கையில் அவர்களுக்குப் பெரும் வெ(ற்)றியைத் தந்தது. அவர்களின் அந்தத் தந்திரோபாய வலையில் தெரிந்தோ தெரியாமலோ விழுந்த சிங்கள தேசம், இன்று இலங்கைத் தீவின் முழு மக்களுடனும் சேர்ந்து அதன் விளைவை அனுபவித்துக் கொண்டிருக்கின்றது.**

**எரிபொருள் இல்லை, எரிவாயு இல்லை, மின் விநியோகம் சீரில்லை, அத்தியாவசியப் பொருள்களின் விலை பல மடங்கு, மருந்துகள் இல்லை, சுகாதார சேவைகளும் படுக்கப் போகின்றன.**

**நிலைமையின் விபரீதத்தைப் புரிந்து கொண்டு தென்னிலங்கை மக்கள் வீதிக்கு இறங்கி இருக்கின்றார்கள். ராஜபக்ஷவைக் கூண்டோடு வீட்டுக்குக் கலைக்கும் உறுதியில் அவர்கள் களத்தில் இறங்கியதும், அதை எதிர்கொள்ளவும் மீண்டும் இனவெறிக் குரோதத்தை – குரூரத்தை – கையில் எடுத்து இருக்கின்றார்கள் ராஜபக்ஷக்கள். அவர்கள் திருந்துபவர்களாக இல்லை.**

**நேற்று முன்தினம் நாட்டு மக்களுக்கு உரையாற்றிய பிரதமர், 13 வருடங்களுக்கு முன்னர் முடிவுற்ற யுத்தத்தை இழுத்து, நினைவூட்டி, இனக்குரோதத்தை ஞாபகப்படுத்திப் பேசுகின்றார். ராஜபக்ஷக்களை வீட்டுக்குப் போ என்று குரலெழுப்பி போராடும் சாதாரண அப்பாவி இலங்கைப் பிரஜையைப் பார்த்து 'படையினரைச் சீண்டாதீர்கள்!' என்று மொட்டந் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடுகின்றார்.**

**மறுபுறத்தில், கோட்டா அரசுக்கு ஆதரவான இனவெறிப் பிக்குகள் கொழும்பிலும் பிற இடங்களிலும் களத்தில் இறங்கி விட்டனர்.**

**கோட்டாவை வீட்டுக்கு அனுப்பும் போராட்டம் என்ற பெயரில் 'நானாக்கள்' கொழும்பில் குவிந்து விட்டனர் என்றும், அவர்களுக்குப் புலம்பெயர்ந்த தமிழ் தீவிரவாதிகள் பணத்தை அள்ளிக் கொட்டுகின்றனர் என்றும், கிறிஸ்தவ பாதிரிமாரும் இதற்குப் பின்னால் திரண்டுள்ளனர் என்றும் காலிமுகத்திடலில் திரண்டிருக்கும் போராட்டக்காரர்களுக்கு எதிராக பேரினவாதத்தை கொப்பளிக்க செய்யும் கீழ்த்தர பணியை இந்த பிக்குமார் அணி நேற்றைய தனது பேரணியில் காட்டத் தொடங்கிவிட்டது.**

**இலங்கை என்ற ஒரு தேசமாக மீண்டெழும் வாய்ப்பை இந்தப் பேரினவாதக் காட்டு கூச்சலுக்கு மீண்டும் பலியாகி, திரும்பவும் இந்த தீவு இழக்கப் போகின்றதா? அல்லது பேரினவாதத்தைத் தூக்கிக் கடாசி, இந்த தீவின் எல்லா தேசங்களையும் அரவணைத்து ஒரு நாடாக நாம் முன்னேறப் போகின்றோமா? அதை முடிவு செய்யும் கடைசி வாய்ப்பு இது என்று நம்புகின்றோம்.**

# ஜனநாயகத்தை நிலைநாட்டவே நம்பிக்கையில்லாப் பிரேரணை!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் விளக்கம்



நம்பிக்கையில்லாப் பிரேரணையும், ஜனாதிபதிக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணையும் ஜனநாயகத்தை நிலைநாட்டக் கொண்டு வரப்படுகின்றன என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.


ஜனநாயகத்திற்காகவே இளைஞர்கள் வீதியில் இறங்கியுள்ளனர். அவர்களின் போராட்டத்தை அரசாங்கம் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த அரசாங்கம் இராணுவத்தினரை பாதுகாப்பதாக கூறினாலும் யுத்தத்தில் வெற்றிபெற்ற பொன்சேகா உள்ளிட்டவர்களைப் பழிவாங்கியது யார் என்பது அனைவரும் அறிந்ததே என்றும் அவர் கூறினார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை, குற்ற விசாரணைப் பிரேரணை, 19ஆவது திருத்தத்தை கொண்டுவந்து நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பது போன்ற தீர்மானத்தை முன்னெடுக்கத் தயங்கப் போவதில்லை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

தற்போதைய நெருக்கடிக்கு உரிய முறையில் தீர்வு காணப்பட வேண்டுமெனவும், பொருளாதார யுத்தத்தை ஆயுதங்களால் வெல்லக் கூடாது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டார்.

# இலங்கை நிலைவரம்; பைடன் - மோடி பேச்சு





இலங்கையின் நிலைவரம் குறித்து, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுடன், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கலந் துரையாடியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு நாடுகளின் அரசதலைவர்களுக்கும் இடையிலான காணொலி மூலமான சந்திப்பு, நேற்று முன்தினம்தினம் இடம்பெற்றது.

இதன்போது, பாகிஸ்தான் மற்றும் இலங்கையின் நிலைமைகள் குறித்து பைடனுடன் மோடி கலந்துரையாடினார் என 'த ஹிந்து' செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும் இந்தக் கலந்துரையாடலில் உக்ரைன் போர் குறித்தும் இரு தலைவர்களும் பேசினர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாட்டு நலன் கருதியே அரசை ஆதரித்தேன்!



நாட்டு நலன் கருதியும், மனச்சாட்சியின் பிரகாரமுமே அரசை ஆதரிக்கும் முடிவை எடுத்தேன் என்று இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்தார்.

அரசுக்கு ஆதரவு தெரிவித்து விவசாயத்துறை இராஜாங்க அமைச்சுப் பதவியை நேற்றுமுன்தினம் பெற்றுக்கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார, நேற்று கடமைகளைப் பொறுப்பேற்றார்.

அதன்பின்னர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்த அவர்,

இடைக்கால அரசொன்றை அமைப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டது. அந்த முயற்சி தோல்வி கண்டது. எனவே, நாட்டை வங்குரோத்து அடையவிடமுடியாது. ஜனாதிபதி விடுத்த அழைப்பின் பிரகாரம்தான் இராஜாங்க அமைச்சுப் பதவியை ஏற்றேன். விவசாயிகளின் பிரச்சினையைத் தீர்க்க வேண்டியுள்ளது. மனச்சாட்சிக்குக் கட்டுப்பட்டே இந்த முடிவை எடுத்தேன். – என்றார்.

# இடைக்கால அரசு சரிவராதாம் அமைச்சரான பண்டார கருத்து

11 கட்சிகள் முன்வைத்த இடைக்கால அரசாங்கத் திட்டம் சாத்தியமற்றது என்ற காரணத்தினாலேயே தாம் இராஜாங்க அமைச்சுப் பதவியை ஏற்றுக்கொண்டேன் என சுதந்திரக் கட்சியின் எம்.பியாக இதுவரை செயற்பட்டு வந்த சாந்த பண்டார தெரிவித்துள்ளார்.

நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் சாந்த பண்டார இராஜாங்க அமைச்சராக பதவிப்பிரமாணம் செய்தமை, கட்சி கொள்கையை காட்டிக் கொடுக்கும் செயலென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தவிசாளர் ரோஹண லக்ஷமன் பியதாஸ தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 250 கோடி டொலர் உதவி சீனாவிடமிருந்து வருகிறது

கொழும்பு, ஏப். 13

இலங்கைக்கு சீனா 250 கோடி டொலர் (சுமார் 75 ஆயிரம் கோடி ரூபா) நிதியுதவியை வழங்க முன்வந்துள்ளதாக சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் பாலித கோகன தெரிவித்துள்ளார்.

நாடு பொருளாதார நெருக்கடியால் பாரிய பாதிப்புக்குள்ளாகியுள்ள நிலையில், சீன அதிகாரிகள் இதற்கான உறுதியை அளித்துள்ளனர் என அவர் கூறியுள்ளார். இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அவர் –

இலங்கை பெய்ஜிங்கில் இருந்து நூறு கோடி டொலர் கடனைப் பெற உள்ளது. இதன் மூலம் ஜூலையில் நிலுவையில் உள்ள சீனக் கடன்களை திருப்பிச் செலுத்த முடியும்.

அத்துடன் ஆடை ஏற்றுமதித் தொழிலுக்குத் தேவையான பொருள்களை 150 கோடி டொலர் கடன் வரியில் கொள்வனவு செய்யமுடியும் எனக் குறிப்பிட்டுள்ளார்.



இதேவேளை, சீனாவிடம் இருந்து கடன் உதவியைப் பெற்றுக்கொள்வதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அண்மையில் சீன அதிபர் ஜீ ஜின்பிங்கிற்கு கடிதம் எழுதியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சு.கவின் இரு எம்.பிக்கள் அரசுப் பக்கம் சாய்ந்தனர்

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 14 எம்.பிக்களும் அரசுக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறி சுயாதீனக் குழுவாகச் செயற்படத் தீர்மானித்த நிலையில் அவர்களில் இரண்டு பேரை அரசு அமைச்சுப் பதவிகளைக் கொடுத்துத் தன் பக்கம் இழுத்து விட்டதாக சு.க. குற்றம் சுமத்தியுள்ளது.

விவசாயத்துறை இராஜாங்க அமைச்சராக சுதந்திரக் கட்சியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார பதவியேற்றுள்ளார்.

அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்து கட்சியின் கொள்கைகளுக்கு இவர் துரோகம் இழைத்துள்ளார் என சு.கவின் மூத்த தலைவர்களுள் ஒருவரான ரோஹண லக்ஷமன் பியதாச தெரிவித்துள்ளார்.

சசீந்திர ராஜபக்ஷ தனது இராஜாங்க அமைச்சர் பதவியை ராஜினாமா செய்தமையை அடுத்து அவரது பதவிக்கு சாந்த பண்டார நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை சு.கவைச் சேர்ந்த பிரியங்கர ஜயரத்னவின் இராஜினாமாவை ஜனாதிபதி ஏற்க மறுத்தார் என ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, அவர் தொடர்ந்து வெளிநாட்டு வேலைவாய்ப்புஊக்குவிப்புமற்றும்சந்தைபல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சராக செயற்படுவார் என்று கூறப்பட்டது.

# வற்றாப்பளையில் சிறப்புற நடந்த கண்ணகி அம்மன் ஆலய மஞ்சம்





(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு, ஏப். 13

வரலாற்று சிறப்பு மிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய மஞ்ச உற்சவம் நேற்று முன்தினம் மாலை மிகவும் சிறப்புற இடம்பெற்றது.

வருடம் தோறும் பங்குனி திங்களின் இறுதி திங்கள் தினத்திலே வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் மஞ்ச உற்சவம் பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் பங்குபற்றுதலுடன் இடம்பெறுவது வழமை.

இருப்பினும் கடந்த காலங்களில் நாட்டில் நிலவிய கொரோனா மற்றும் பல்வேறு நிலைமைகள் காரணமாக 2020 ஆம் ஆண்டு இடம்பெறாத மஞ்ச உற்சவம், கடந்த ஆண்டு குறைந்தளவான பக்தர்களுடன் இடம்பெற்றது. இம்முறை அதிக எண்ணிக்கையான பக்தர்கள் கலந்து கொள்ள அது சிறப்புற இடம்பெற்றதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

பங்குனித் திங்களின் இறுதி திங்களான நேற்று முன்தினம் ஆலயத்தில் விசேட வழிபாடுகள் இடம்பெற்றமையோடு வழிபாடுகளைத் தொடர்ந்து வசந்த மண்டபத்தில் இடம்பெற்ற விசேட பூசைகளின் பின்னர் அம்மன்எழுந்தருளி உள் வீதி வலம் வந்து வெளிவீதியிலே மஞ்சத்தில் உலா வந்து அடியவர்களுக்கு அருள்பாலித்தார்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு தங்களுடைய நேர்த்திக் கடன்களை நிறைவு செய்தமையினையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.



# ஆலையடிவேம்பில் நேற்று 54 பவுண் நகைகள் அபேஸ்

அம்பாறை ஆலையடிவேம்பு பிரதேசத்தில் உள்ள ஆசிரியர் ஒருவரின் வீட்டில் நேற்று அதிகாலை 1 மணி அளவில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்தில் 54 பவுண் தங்க நகைகள் களவாடப்பட்டுள்ளன என முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டுள்ளதாக அக்கரைப்பற்றுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீட்டின் ஜன்னலை உடைத்து உள்ளே நுழைந்த திருடர்கள் குடும்பத்தினர் உறங்கிக் கொண்டிருந்த அறையைப் பூட்டிவிட்டு, மற்றைய அறையைத் திறந்து அங்கிருந்த அலுமாரியை உடைத்து, அலுமாரியில் இருந்த வீட்டு உரிமையாளர், அவரது தாயார், சகோதரி என மூவரின் மூன்று தாலிக்கொடி அடங்கலாக 54 பவுண் தங்க நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பாக அக்கரைப்பற்று பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. அக்கரைப்பற்று பொலிஸார், அம்பாறை மாவட்ட குற்றப்புலனாய்வு பிரிவினர், அம்பாறை தடயவியல் விசாரணை பிரிவினர் எனப் பல தரப்பினரும் சம்பவ இடத்துக்கு வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. மேலதிக விசாரணைகளைத் தாங்கள் மேற்கொண்டு வருகின்றோம் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இப்பகுதியில் இரு நாள்களுக்கு முன்னரும் வீதியில் சென்றுகொண்டிருந்த பெண் ஒருவரின் மாலையை அறுக்க ஒருவர் முற்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# புலிகளைப் புத்துயிர் பெறச்செய்ய முயற்சியாம் இந்தியாவில் நால்வரது சொத்துகள் முடக்கம்!

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைப் புத்துயிர் பெறச்செய்ய, போதைப்பொருள் மற்றும் ஆயுதக் கடத்தலில் ஈடுபட்டனர் எனக் கூறப்படும் நான்கு இந்தியர்களின் சொத்துக்கள் தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளன.

இந்த நபர்களது வீடுகள், வாகனங்கள், பணம் உள்ளிட்ட 36 கோடி ரூபா மதிப்புள்ள சொத்துகளை இந்திய அமுலாக்க பிரிவு பறிமுதல் செய்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது தொடர்பான செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:–

கடந்த ஆண்டு மார்ச் 18 ஆம் திகதி இந்திய கடற்பரப்பில் கடலோர காவல்படையினரால் தடுத்து நிறுத்தப்பட்ட இலங்கைபடகில்இருந்து300கிலோபோதைப்பொருள், ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகள் கைப்பற்றப்பட்ட நிலையில், இவ்வழக்கு தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டவர்களிடம் மத்திய அரசு விசாரணை நடத்தி வருகிறது.

படகில் கடத்தப்பட்ட போதைப்பொருள் மற்றும் ஆயுதங்கள், சுரேஷ் ராஜ், சற்குணம் மற்றும் அவர்களது நண்பர்களுக்காகவும், அந்த போதைப்பொருள் விற்பனையின் ஊடாக வருமானம் பெற்றுக்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் இந்த வருமானத்தில் மேலதிக போதைப்பொருள்களை வாங்குவதற்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைப் புத்துயிர் பெறச்செய்வதற்காகவும் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளமையும் விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது.

சுரேஷ் ராஜ், சற்குணம் ஆகியோர் முன்பு போதைப்பொருள் கடத்தல் வழக்கில் தண்டனை பெற்றவர்கள் என்றும், சௌந்தரராஜன் மீது கிரிமினல் வழக்கு நிலுவையில் இருப்பதாகவும் அச்செய்தியில் கூறப்பட்டுள்ளது.

# மாமனாரை அடித்துக் கொன்ற மருமகன்

மாத்தறை, கிரலகெலே பகுதியில் நபர் ஒருவர் மருமகனால் கொலை செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தனிப்பட்ட தகராறு காரணமாக இது இடம்பெற்றுள்ளது.

இந்த நபரை மாலிம்படை மத்திய பிரதேசத்தில் இருந்து லொறி ஒன்றில் ஏற்றிச் சென்று அடித்துக் கொலை செய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். உயிரிழந்தவர் 43 வயதான மாலிம்பட பகுதியைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கொலைக்கு உதவிய குற்றத்திற்காக மாத்தறையைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் மருமகன் பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளமையுடன், அவரைக் கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை மாலிம்படை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கையில் மறுக்கப்படும் இலவச சுகாதார உரிமை!

## புலம்பெயர் மக்களிடம் உதவி கோரும் அரச வைத்திய அதிகாரிகள்

நாட்டில் இலவச சுகாதார உரிமை மறுக்கப்படுவதாகவும் அதன் அடிப்படையில் பல்வேறு நாடுகளிலுமுள்ள இதர வெளிநாடுகளில் உள்ள எமது உறவுகள், எமது மக்களுக்காக மனமுவந்து தங்களது நிதிப்பங்களிப்பை, அல்லது அவர்களால் முடிந்தளவு தேவையான மருந்துப் பொருள்களை, மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்கு முன்வருமாறு அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் அரச வைத்திய அதிகாரிகள் சங்க இணைப்பாளர் வைத்தியர் உமாசுதன் தனது அலுவலகத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

இன்று நாடு முழுவதும் சுகாதார துறை மிகவும் நலிவடைந்த நிலையில் உள்ளது.

சுகாதாரத்துறை தற்பொழுது மருத்துவ சாதனங்கள், அத்தியாவசியமான மருந்துப் பொருள்கள், நோயாளிகளின் உயிர்காக்கும்மருத்துவஉபகரணங்கள், நோயாளிகளுக்குத் தேவையான அத்தியாவசியமான சேவைகளை வழங்குவதற்குத் தேவையான ஆய்வுகூட உபகரணங்கள், ஆய்வுகூடத்தில் நோயாளர்களின் இரத்த மாதிரிகளைச் சோதிப்பதற்கான மாதிரி இரசாயனப் பொருள்கள் என்பவற்றுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மற்றும் ஐ.சி.யு. தியேட்டர் போன்றவற்றில் நோயாளர்களுக்குத் தேவையான மருத்துவ வசதியை வழங்கக் கூடிய உபகரண பற்றாக்குறை உள்ளது. புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கு ஒட்சிசனை வழங்குவதற்குத் தேவையான ஈரி ரியூப் போன்ற மிகவும் அத்தியாவசியமான உபகரணங்கள், அத்தியாவசியமான மருந்துப் பொருள்கள் போன்ற அனைத்துக்குமே நாடளாவிய ரீதியில்மிகுந்ததட்டுப்பாடானநிலைதான் தற்போது காணப்படுகிறது.

இந்தத்தட்டுப்பாடானநிலைமைக்குக் காரணம் முறையற்ற அரசின் நிதி நிர்வாகமும், முறையற்ற திட்டமிடல் இன்மையுமே. இதனை அரச வைத்திய அதிகாரிகள் சங்கமாகிய நாங்கள் கிட்டத்தட்ட இரண்டு மாதங்களுக்கு முன்கூட்டியே சுகாதாரத்துறை அமைச்சுக்கு – அதாவது சுகாதார அமைச்சு செயலாளருக்கு – கடிதம் மூலம் அறிவித்திருக்கின்றோம்.

பணிப்பாளர் நாயகத்துக்கு நாங்கள் எழுத்து மூலம் அறிவித்திருக்கின்றோம். இவ்வாறான பற்றாக்குறைகளை நாங்கள் மிகவும் குறுகிய காலத்தில் எதிர்கொள்ள வேண்டி நேரிடும். அதற்குரிய முறையான நடவடிக்கைகளை, திட்டமிடல்களை முன்கூட்டியே ஏற்படுத்தி தாருங்கள் என்று நாங்கள் கோரியிருந்தோம். ஆனாலும் எமது கோரிக்கைகள் செவிமடுக்கப்படாத நிலையில், தற்பொழுது மக்களின் அடிப்படை உரிமையாகிய இலவச சுகாதாரம் தற்பொழுது அவர்களுக்கு மறுக்கப்படுகின்றது.

அதாவது அவர்களது உயிர் காக்கும் சுகாதாரத் துறை தற்பொழுது மிகவும் நலிவடைந்த நிலையில் மிகுந்த அத்தியாவசியமான தேவைகளைக் கூட வழங்க முடியாத நிலையில் உள்ளது. அதற்கு உதாரணமாக தற்போது நாட்டின் பிரதானமான வைத்தியசாலைகள் சத்திர சிகிச்சைகளின் அளவுகளைக் குறைக்கத் தொடங்கியுள்ளன.

அதற்கு மருந்துப் பொருள்கள் இல்லாத காரணம் மற்றும் வைத்தியசாலை உபகரணங்கள் தட்டுப்பாடு போன்ற பிரதான காரணங்களாக இருக்கின்றன. ஆகவே இதனை நாங்கள் கண்டிக்கும் முகமாக நாடளாவிய ரீதியில் 7 ஆம் திகதி திங்கட்கிழமை கொழும்பில் உள்ள எமது தாய்ச் சங்கத்தில் அவசரமாக மத்திய குழுக் கூட்டம் கூட்டப்பட்டது.

அங்கு எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் நாடளாவிய ரீதியில் எமது அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் இந்த சுகாதாரத்துறை நலிவு தொடர்பாக கண்டன ஆர்ப்பாட்டங்களையும், கண்டன பேரணிகளையும் நாடு தழுவிய ரீதியில் மேற்கொண்டு வருகிறது.

இதன் மூலம் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுப்பதன் மூலம் இந்த சுகாதாரத் துறையை, இலவச சுகாதார துறைக்கான முன்னுரிமையை அதற்குரிய முழுமையான வளங்களை, அதற்குரிய மருந்துப் பொருள்களை, அத்தியாவசியமான மருந்து பொருள்களை, அத்தியாவசியமான உபகரணங்களை, வழங்கி மக்களின் உயிரைப் பாதுகாப்பதற்காக நாங்கள் கேட்டுப் போராடி வருகின்றோம்.

அந்த வகையில் அதனைத் தாண்டி எமது அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தற்பொழுது பல செயல்திட்டங்களை வகுத்துள்ளது. அதன் அடிப்படையில் நாம் பல்வேறு நாடுகளிலுமுள்ள இதர வெளிநாடுகளில் உள்ள எமது உறவுகளை, எமது மக்களுக்காக அவர்கள் மனமுவந்து தங்களது நிதிப்பங்களிப்பை, அல்லது அவர்களால் முடிந்தளவு தேவையான மருந்துப் பொருள்களை, மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்கு முன்வருமாறு கோரியிருக்கின்றோம்.

அதற்கு நாங்கள் விசேட மருத்துவர் செயற் குழு ஒன்றை அமைத்து, அதற்குப் பொறுப்பாக இரண்டு பிரதான வைத்திய அதிகாரிகள் எமது அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் சிரேஷ்ட வைத்திய அதிகாரிகள் பொறுப்பு வகிக்கின்றனர்.

அதன்மூலம் அவர்கள் தற்பொழுது வெளிநாடுகளில் இருக்கின்றவர்களுடன் தொடர்பு கொண்டு அதற்குரிய உதவிகளைப் பெறுவதற்கான வழிவகைகளை வகுத்துள்ளனர். அதற்கு மேலதிகமாக நாங்கள் சுகாதார அமைச்சையும் கோரியிருக்கின்றோம்.

இலங்கையில் தற்பொழுது உள்ளது நாடு தழுவிய ரீதியில் சுகாதார நலிவு சுகாதார சீர்கேடு என நாங்கள் இதனைக் குறிப்பிட வேண்டும்.

இந்த நிலைமை தாங்கள் அனைவரும் அறிந்தது. 2019 காலப்பகுதியில் 2020 காலப்பகுதியில் கொவிட் இலங்கையைத் தாக்கியிருந்தது. கடந்த இரு வருடங்களாக கொவிட் தொற்றிடம் நாங்கள் எவ்வாறு போராடினோம், எவ்வாறு பாரிய நோய்த் தொற்றை நாங்கள் முகங்கொடுத்து அரச வைத்திய அதிகாரிகள் சங்கம், சுகாதார அமைச்சு இணைந்து மக்களை பாதுகாப்பதற்கு எவ்வளவு நாங்கள் போராடிக் கொண்டிருக்கின்றோம் என்பது நீங்கள் அனைவரும் அறிந்ததே.

அதில் நாங்கள் வெற்றியும் கண்டுள்ளோம் என்பது கண்கூடு. ஆனால் அப்போது இருந்தது எமக்கு முன்னால் நாங்கள் கிருமியுடன் போராட வேண்டியிருந்தது.

நாங்கள் அதற்கான வழிவகைகளைக் கண்டறிந்தோம். அதற்காக நாங்கள் போராடினோம். வெற்றியும் அடைந்தோம். ஆனால் தற்பொழுது இருப்பது நாங்களே கையறு நிலையில் உள்ளோம்.

அதாவது எங்களிடம் மருந்துப் பொருள்கள் இல்லை, அத்தியாவசிய உபகரணங்கள் இல்லை, மக்களுக்கு வழங்குவதற்குத் தேவையான மருத்துவப் பொருள்கள் இல்லை எனும் நிலையில் சுகாதாரத்துறை கைகட்டி மக்கள் இறப்பதையோ மக்கள் நலிவுறுவதையோ, மக்கள் நோய்களால் பாதிப்படைவதையோ ஒன்றும் செய்ய முடியாமல் பார்த்துக்கொண்டு இருக்கும் துரதிஷ்ட வசமான நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம்.

அதற்கான முற்று முழுதான காரணங்களாக அரசினுடைய திட்டமிடப்படாத நடவடிக்கையும், முறையற்ற நிதி நிர்வாகமும் இருக்கின்றன

ஆகவே, நாங்கள் இந்நிலைமையை மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறோம். அரசு அரச வைத்தியர்கள் சங்கம் இதனை மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறது. நாடளாவிய ரீதியில் நாங்கள் இதற்காக அனைத்து மக்களையும் தெளிவூட்டி வருகின்றோம். மற்றும்நாங்கள் அரசைக்கேட்டுக்கொள்வது இதற்கு மிகவும் விரைந்து உரிய தீர்வுகளை வழங்க வேண்டும் என்பதுதான். எங்களுடைய கோரிக்கை அதுதான்.

அத்துடன் தற்பொழுது நாங்கள் ஒரு திட்டத்தை வைத்திருக்கின்றோம். 'இருகம' என்று சொல்லப்படுகின்ற கொவிட் தொற்று முதலாவது அலையின்போது உருவாக்கப்பட்ட ஒரு நிதியம். அந்த நிதியத்தில் உள்ள எஞ்சியுள்ள பணத்தை, எஞ்சியுள்ள பொருள்களை, தற்பொழுது மிக வினைத்திறனாக பாவித்து அத்தியாவசியமான மருந்துப் பொருள்களை அதாவது நாங்கள் பட்டியலிட்டு வழங்கியிருக்கின்றோம்.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம், அத்தியாவசியமான மருந்துப் பொருள்கள் தொடர்பில் இலங்கையின் அனைத்து வைத்தியசாலைகளையும் தொடர்பு கொண்டு பட்டியலைத் தயாரித்து வருகின்றோம்.

அதனை நாங்கள் கையளிக்கின்றோம். அந்த அத்தியாவசியமான மருந்துப் பொருள்களை விரைந்து அனைத்து வைத்தியசாலைகளுக்கும் வழங்க வேண்டும். அப்படி வழங்குவதன் மூலமே நாங்கள் மக்களுக்கான சேவைகளை வழங்கக் கூடியதாக இருக்கும். இதற்கு யாழ். மாவட்டமும் விதிவிலக்கல்ல. இலங்கை முழுவதும் உள்ள இந்த தட்டுப்பாடான பாரிய பல்வேறு விதமான வரிசைகளில் உள்ளன. பல்வேறு விதமான வரிசைகள் ஒவ்வொருவிதமான நிறுவனங்களுக்கும் முன்னால் உள்ளன.

ஆனால் நோயாளர் வரிசை என்பது மிகவும் பாரதூரமான ஒன்று. சுகாதார துறை வருமுன் காப்பு பகுதி, சிகிச்சை பகுதி இந்த இரண்டு துறைகளுமே நலிவுறும் நிலையில்தான் உள்ளன. இந்த தட்டுப்பாடான நிலைமையில் அப்படியென்றால் நோய் தடுப்பு சரியான முறையில் நடைபெறாத பொழுது நோயாளர்களின் எண்ணிக்கை மிகவும் விரைவாக அதிகரிக்கும்.

இவ்வாறு அதிகரிக்கும் பொழுது நோயாளரின் நோய் தடுப்பும் இல்லை, நோயாளர் பராமரிப்பும் இல்லை, அதே நேரம் நோயாளியைக் காப்பதற்கு வழங்கக்கூடிய மருந்துகளும் இல்லை என்றால் நாட்டின் நிலைமை மிகவும் மோசமாக போய்விடும். ஒவ்வொரு ஆரோக்கியமானவர்களும் ஆரோக்கியமற்ற ஏதிலிகளாகத் தள்ளப்படுவார்கள்.

அதனை நாங்கள் பார்த்துக்கொண்டு சும்மா இருக்க வேண்டிய நிலைமை வந்துவிடுமோ? என்று நாங்கள் பயப்படுகிறோம். அதனால் அதற்குப் பொறுப்பான அமைச்சையும், அரசாங்கத்தையும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம்கேட்டுக்கொள்வதுஎன்னவெனில் இதற்கு உடனடியாக விரைந்து அதற்கு பொருத்தமான அதற்கு நாங்கள் முன்வைத்த தீர்வுகளை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

மக்களுக்குத்தேவையானஅடிப்படை உரிமையான இலவச சுகாதாரத்தை, அவர்களுக்கு தேவையான நோய்காக்கும் அந்தத் துறையை மழுங்க விடாமல், அவர்களுக்குத் தேவையான உரிய வசதிகளை, உரிய முறையில் வழங்கி, நாட்டின் சுகாதாரத்தை, நாட்டு மக்களை காப்பாற்றுவதற்கு, அரசும் உரிய அதிகாரிகளும் முன்வர வேண்டும் என்று நாங்கள் விநயமாக கேட்டுக் கொள்கிறோம். – என்றார்.

## 19 ஐ நடைமுறைப்படுத்தினாலேயே சர்வதேச ஒத்துழைப்புக் கிடைக்கும்

### மைத்திரி கூறுகிறார்

20 ஆவது திருத்தத்தை முழுமையாக இரத்து செய்து, 19 ஆவது திருத்தத்தை மீண்டும் கொண்டு வந்தால் சர்வதேசம் இலங்கைக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஜனநாயகத்தை ஸ்தாபிக்க வேண்டுமாயின் 19 ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும், சர்வதேசத்தின் மத்தியில் அரசாங்கத்திற்கு நன்மதிப்பு கிடையாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

புதிய பிரதமரின் கீழ் இடைக்கால அரசாங்கத்தை ஸ்தாபிக்குமாறு ஜனாதிபதிக்கு வலியுறுத்தப்பட்டுள்ளமையுடன் பல யோசனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன என மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

மேலும் ராஜபக்ஷக்கள் முழுமையாகப் பதவிவிலக வேண்டும் என நாட்டு மக்கள் வெளிப்படுத்தும் எதிர்ப்புப் போராட்டம் தொடர்பாக அரசாங்கம் அவதானம் செலுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

தேசிய நிறைவேற்று சபை ஒன்றை ஸ்தாபித்து அதனூடாக அமைச்சர்களை நியமிப்பது அவசியம் என்றும், இடைக்கால அரசாங்கத்தில் அனைத்து அரசியல் கட்சிகளும் அங்கம் வகிக்க வேண்டும் என்றும் மைத்திரிபால சிறிசேன யோசனை முன்வைத்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# 19 போய் 20 வந்தால் சில அதிகாரங்கள் தம்பியிடமிருந்து அண்ணனுக்குப் போகும்

## அவ்வளவுதான் நடக்கும் என்கின்றார் ரணில்



19ஆம் திருத்தச்சட்டத்தை மீள கொண்டு வந்தால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வைத்திருக்கின்ற அமைச்சர்களைத் தீர்மானிக்கும் பொறுப்பு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்குச் செல்லும். ஆகவே இது பயனற்றது என முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இளைஞர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

19ஆம் திருத்தச்சட்டத்தின் ஊடாக நாடாளுமன்றுக்கு அதிகாரம் பெற்றுக் கொள்ளப்படுகிறது என்றும், ஜனாதிபதி அமைச்சுப் பதவி வகிக்க முடியாது என்றும் தெரிவித்த அவர், எனவே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தான் வகிக்கின்ற அமைச்சுப் பொறுப்பை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு வழங்குவார் எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அமைச்சர்களை நியமிக்கும்போது ஜனாதிபதி, பிரதமரின் ஆலோசனைகளைப் பெற்றே நியமிக்க வேண்டி வரும் என்றும் தெரிவித்துள்ளார்.

இப்போது நான் பிரதமராகவும், ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேனவும் இல்லை, ஜனாதிபதியும் பிரதமரும் தற்போது சகோதரர்களாக இருக்கிறார்கள் என்றும், எனவே அவர்கள் இருவரும் கலந்துரையாடியே அமைச்சர்களைத் தெரிவு செய்வார்கள் என்றும், எனவே தற்பொழுது 19ஆம் திருத்த சட்டத்தை மீள கொண்டு வருவது பயனற்றது என்றும் ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போதைய நிலைமையில் 19ஆம் திருத்தச் சட்டத்தை கொண்டுவருவது முக்கியமில்லை, தற்போதைய பிரச்சினை பொருளாதார நெருக்கடிதான். அதனையே முதலில் தீர்க்கவேண்டும் எனவும் ரணில் குறிப்பிட்டுள்ளார்.

# கோட்டாபய தலைமையில் காபந்து அரசா? கேலிக்கூத்து என்கிறார் மனோ கணேசன்



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் காபந்து அரசாங்கம் அமைப்பது கேலிக்கூத்தானது எனத் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா பொது ஜன பெரமுனவின் தலைவர் தலைமையிலான அமைச்சரவை அவருக்கு கீழ் உரிய முறையில் செயற்பட முடியாமையே இதற்கான காரணம் என அவர் தெரிவித்தார்.

இதன்படி ஜனாதிபதி பதவியில் இருந்து கோட்டாபய ராஜபக்ஷ விலக வேண்டும் எனவும், கட்சி பேதமின்றி அனைத்து மக்களும் ஒன்றிணைந்து 20 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை ரத்து செய்து 19 ஆவது திருத்தத்தைக் கொண்டு வர வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இந்த நேரத்தில் நாட்டுக்குக் காபந்து அரசாங்கம் தேவை என்பது தெளிவாகத் தெரிந்தாலும், இந்த நாட்டு மக்கள் ஜனாதிபதி பதவி விலக வேண்டும் எனத் தெரிவிப்பதையும் பொறுப்பு வாய்ந்த அரசாங்கம் கேட்க வேண்டும் என்பதுதான் நாட்டு மக்களின் ஒரே கோரிக்கை. இந்த அடிப்படையில்தான் அரசியல் கட்சிகள், சிவில் சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் என கட்சி பேதமின்றி கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இப்போது 69 லட்சம் மக்கள் வீதியில் இறங்கி போராட்டம் நடத்துகிறார்கள். 20 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் கிடைத்த அதியுச்ச அதிகாரங்களை வைத்துக் கொண்டு, எதிர்க்கட்சி எம்.பிக்களை காபந்து அரசாங்கம் அமைக்குமாறு அரச தலைவர் அழைக்கின்றமை கேலிக்கூத்தானது.

ஜனாதிபதியின் அமைச்சரவை செயலிழந்தது. எனவே இலங்கை அரசிடம் இன்னும் அமைச்சரவை இல்லை. தனது சொந்த அமைச்சரவையை சுதந்திரமாகச் செயற்பட அனுமதிக்காத ஜனாதிபதி எவ்வாறு எதிர்க்கட்சியின் பங்களிப்புடன் காபந்து அரசாங்கமொன்றை அமைக்க சந்தர்ப்பம் வழங்க முடியும்?

எனவே ஜனாதிபதி பதவி விலகுகின்றமை மட்டுமன்றி அரசதலைவரின் சில விசேட அதிகாரங்களை உள்ளடக்கிய 20ஆவது திருத்தச்சட்டத்தையும் நீக்கி, 19ஆவது திருத்தச்சட்டத்தையும் இன, மத, கட்சி பேதமின்றி எமது நாட்டிற்கு கொண்டு வர வேண்டும்.

அரசும் இதில் இணைய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். மற்றபடி இதிலிருந்து நாம் தப்ப முடியாது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதே நாட்டில் பொதுவான ஒருமித்த கருத்து. – என அவர் தெரிவித்துள்ளார்.

# கடமைக்கான கைத்தொலைபேசிகளை பொலிஸ் அதிகாரிகள் நிறுத்தக் கூடாது

## பொலிஸ் மா அதிபர் கண்டிப்பான உத்தரவு

அனைத்து பொலிஸ் பொறுப்பதிகாரிகளும், சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளும் தமது கடமை நேர உத்தியோகபூர்வ தொலைபேசிகளை, எந்த நேரத்திலும் தொடர்புகொள்ள முடியுமானவாறு செயலில் வைத்திருக்க வேண்டும் என பொலிஸ் மா அதிபர் சந்தன விக்ரமரட்ன உத்தரவிட்டுள்ளார்.

சில பொலிஸ் பொறுப்பதிகாரிகள் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் தமது கடமை நேர உத்தியோகபூர்வ கையடக்கத் தொலைபேசிகளை செயலிழக்கச் செய்து அல்லது சப்தம் கேட்கா வண்ணம் செயற்படுத்தி வைப்பது அவதானிக்கப்பட்டுள்ள நிலையிலேயே பொலிஸ் மா அதிபர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

நாட்டில் பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் அமைதியை பேணும் வகையில் இவ்வாறு 24 மணி நேரமும் கடமை நேர உத்தியோகபூர்வ கையடக்கத் தொலைபேசிகள் செயலில் இருக்க வேண்டும் எனப் பொலிஸ் மா அதிபரின் உத்தரவில் கூறப்பட்டுள்ளது.



# கிளிநொச்சி நகரில் கிறிஸ்தவர்கள் தீர்வு வேண்டி விசேட பிரார்த்தனை

நாட்டில் காணப்படும் பொருளாதார, அரசியல் நெருக்கடி நீங்கி அமைதியான நிலை ஏற்பட கிளிநொச்சியில் விசேட பிரார்த்தனை முன்னெடுக்கப்பட்டது. வன்னி கிறிஸ்தவ ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்த வழிபாடு நேற்றுமுன்தினம் பிற்பகல் 5 மணியளவில் கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள அங்கிலிக்கன் மிஷன் இலங்கை திருச்சபை முன்பாக இடம்பெற்றது.

பிரார்த்தனையில் ஈடுபட்டவர்கள் ஏ9 வீதியில் கைகளில் மெழுகுவர்த்தி ஏந்தி பாடல் பாடி பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து திருச்சபையில் மெழுகுவர்த்தி ஏற்றி வழிபாட்டில் ஈடுபட்டனர். இந்தப் பிரார்த்தனை நிகழ்வில், கத்தோலிக்க திருச்சபை, அங்கிலிக்கன் மிஷன் இலங்கை திருச்சபை, தென்னிந்திய திருச்சபை, மெதடிஸ்த திருச்சபை, பப்ரிஸ் திருச்சபை ஊழியர்கள் மற்றும் திருச்சபை மக்களும் பங்கு கொண்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

# ஊடகவியலாளர்களுக்கும் நீதி கோரும் பதாகைகள்




படுகொலை செய்யப்பட்ட, கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட, கடத்தப்பட்டுசித்திரவதைசெய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் படங்களுடன் நீதி கோரும் பதாதைகள் ‘கோட்டா வீட்டுக்குப் போ!’ எனத் தொடர் போராட்டம் நடந்து வரும், ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக, வைக்கப்படுள்ளன.

ஊடகவியலாளர்கள் நிமலராஜன், சிவராம், லசந்த விக்ரமதுங்க, பிரகீத் எக்னெலிகொட, கீத் நொயார், போத்தல ஜயந்த ஆகியோரின் படங்களுடன் இந்தப் பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

# அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்த பிரபல பாடகர் மரணம்!

அரசாங்கத்திற்கு எதிராக கொழும்பு காலி முகத்திடலில் முன்னெடுக்கப்பட்டுள்ள போராட்டத்தில் கலந்து கொண்டிருந்த பிரபல ராப் இசை பாடகர் ஷிராஸ் யூனுஸ் இன்று (செவ்வாய்க்கிழமை) காலை உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இன்று (செவ்வாய்க்கிழமை) அதிகாலை காலி முகத்திடலில் உள்ள அரசாங்க எதிர்ப்புப் போராட்ட களத்தில் கூட்டத்தினருக்காக நிகழ்ச்சியை நிகழ்த்திய பின்னர் அவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கட்டுநாயக்க விமான நிலைய ஊழியர்களும் வேலை நிறுத்தம்!

கட்டுநாயக்க விமான நிலைய ஊழியர்கள் கடந்த திங்கட்கிழமை காலை 9:30 மணி முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பளப் பிரச்சினை மற்றும் மேலதிக கொடுப்பனவு போன்ற கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

எவ்வித அரசியல் கட்சிகள் அல்லது தொழிற்சங்கக் கோரிக்கைகளும் இல்லாமல் அனைத்து விமான நிலைய ஊழியர்களும், வேலைநிறுத்த போராட்டத்தில் இணைந்துள்ளனர்.

பணிப் புறக்கணிப்பு மற்றும் எதிர்ப்புப் போராட்டம் இடம்பெற்றாலும் விமான நிலையத்தின் அன்றாட நடவடிக்கைகளுக்கு இதுவரை இடையூறு ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

காலைக்கதிர் Kalaikkathir

# தம்பியைக் காப்பாற்ற முனையும் தமையனது இறுதி முயற்சி பிரதமரின் உரை குறித்து ரெலோ செயலர் ஜனா விமர்சனம்

## மக்கள் தீர்மானம் உங்களால் ஜீரணிக்க முடியாததாகலாம் என எச்சரிக்கை



உலக வரலாற்றில் நடந்த புரட்சிகள், சர்வாதிகார ஆட்சி மாற்றங்கள் அனைத் திற்குமான காரணிகள் நம்நாட்டில் நிரம்பியுள்ளன. என்ன செய்வது என நீங்கள் தீர்மானியுங்கள். இல்லை யெனில் மக்கள் தீர்மானம் உங்களால் ஜீரணிக்க முடியாததாகலாம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடா ளுமன்ற உறுப்பினரும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோ.கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.

நாட்டு மக்களுக்கு பிரதமர் ஆற்றிய உரை தொடர்பில் நேற்று செவ்வாய்க் கிழமை ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு குறிப் பிட்டார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக் கையில் கூறியவை வருமாறு:-

நாட்டு மக்களுக்கு நேற்று (திங் களன்று) பிரதமர் ஆற்றிய உரை தொடர்பாக என் மனதுக்குள் உடன் எழுந்த எண்ணங்களை என் தமிழ்த் தேசிய உணர்வுகளுடன் பகிர்கிறேன்.

அரசுத் தலைமை - அரசாங்கத் தலைமை – மக்கள் முன் இன்னொரு தடவை உரையாற்ற முடியாத நிலையில் அரசாங்கப் பதவியணியில் தன் தம்பியைக் காப்பாற்ற பிரதமர் உரையாற்றியுள்ளார்.

இரண்டரை வருடங்களாக அரசுத் தலைவர், அரசாங்கத் தலைவர் எனும் வகையில் மேதகு அவர்கள் உரையாற் றுவார். இடையிடையே, பிரதமர் தன் தம்பிக்கு முட்டுக்கொடுப்பார்.

அப்படிப் பேசும் போதெல்லாம் சிங்கள, பௌத்த பேரினவாதம் சிறகடித்துப் பறக்கும். அவர்கள் உடல் மொழிகளோ வித்தியாசமாக இருக்கும்.

நேற்றைய பிரதமர் உரையில், சிங்களமும் இல்லை. பௌத்தமும் இல்லை. அவர்களது வழமையான கம்பீர உடல் மொழியும் இல்லை. வார்த்தைகளில் கூட சுரத்து இல்லை. இன்னமும் கூட தமிழ் மக்கள் தம் உரிமைகளுக்காகப் போராடிய 70 வருட வரலாறுகள் அவர்கள் தம்மை தக்க வைக்கத் தேவைப்படுகின்றன.

யுத்தம் முடிந்து இத்தனை வருடங்கள் ஆகிவிட்டன. யுத்தத்தின் காரணங்கள் மாறிமாறி வந்த அரசாங்கங்களால் உணரப்படவில்லை. ராஜபக்ஷ குடும்பம் ஒட்டு மொத்த நாட்டின் சீரழிவுக்குக் காரணம் என்று நாங்கள்தான் கூற வில்லை. உங்கள் அரசின் 11 பங்காளிக் கட்சிகளே கூறுகின்றன. மொட்டுக் கட்சியின் பின்வரிசை உறுப்பினர்கள் கூறுகின்றனர். அமைச்சர்கள் பலர் கூறுகின்றனர். எதிர்க்கட்சிகள் கூறுகின் றன.

ஆனால் நீங்கள் இன்னமும் புலியை ஒழித்த சிங்கங்கள் நாம் என்று புலம்புகிறீர்கள்.

மக்கள் எரிபொருளுக்கு கியூவில் நிற்கிறார்கள். எரிவாயுவுக்கு கியூவில் நிற்கிறார்கள். அத்தியாவசியப் பொருள் களுக்காக அலைகிறார்கள்.

'உரமின்றி வாடுகிறோம்,உயிர்வாழ வழியின்றி இருக்கிறோம் என்று நீங்கள் கூறுவதை ஏற்றுக் கொள்கிறோம். அதை உணர்கிறோம். அது உண்மை என்கி றோம்.' – என்று கூறும் நீங்கள், முதலில் உங்கள் அரச பதவிகளைத் துறவுங்கள். நீங்கள் அடித்த கொமிசன்களை நாட்டின் திறைசேரிக்குத் தாருங்கள் என்பதனை மட்டும் ஏற்க ஏன் தயங்குகிறீர்கள்?

உலகத்தில் எந்த ஓர் அரசுத் தலைவரும் உங்களைப் போல் புகழப்பட்டவர்களுமில்லை. உங்களைப் போல் இகழப்பட்டவருமில்லை. பெரும்பான்மை மக்களின் பெரும்பான் மையால் வெற்றிக்களிப்பில் மமதை கொண்ட நீங்கள், அதே பெரும்பான்மை மக்களின் பெரும்பான்மையினரால் இன்று இகழப்படுகிறீர்கள். இத்த னைக்கும் எம் தமிழ் இளைஞர்கள் இன் னும் ஓரமிருந்து ஓரக்கண்ணால் பார்த் துக் கொண்டிருக்கிறார்கள்.

அரச ஊழியர்கள், நாளாந்த கூலித் தொழிலாளர்கள் வடக்கிலிருந்து தெற்கு வரை, கிழக்கிலிருந்து மேற்கு வரை, யாவரும் உங்களுக்கு எதிராகக் கோஷமிடுகிறார்கள். அதுவும் பெருமை மிகு உங்கள் குடும்பப் பெயரை சந்திக்கு இழுத்து வைத்து இழுக்கை ஏற்படுத்த இன்னமும் விரும்புகிறார்கள்.

உலக வரலாற்றில் நடந்த புரட்சிகள், சர்வாதிகார ஆட்சி மாற்றங்கள் அனைத் திற்குமான காரணிகள் நம்நாட்டில் நிரம்பியுள்ளன. என்ன செய்வது என நீங்கள் தீர்மானியுங்கள்.

இல்லையெனில் மக்கள் தீர்மானம் உங்களால் ஜீரணிக்க முடியாததாகலாம். நேற்றைய (திங்கள் இரவு) உங்கள் உரை என் மனதில் தந்த உணர்வு இதுவே. அது தம்பியைக் காப்பாற்ற முனையும் தமை யனது இறுதி முயற்சி என்பதுவே. – என்றார்.

# குற்ற விசாரணைப் பிரேரணை தொடர்பாக கூட்டமைப்பாக ஒன்றுபட்டு முடிவெடுப்போம்

## அதுவே நல்லது என்கிறார் சித்தார்த்தன் எம்.பி.



ஜனாதிபதிக்கு எதிரான குற்றவிசாரணைப்பிரேரணை தொடர்பாக, தனியாக முடிவு எடுப்பதை காட்டிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக ஒரு முடிவு எடுத்தால்தான் அது பலமாக இருக்கும் என புளொட் தலைவரும் நாடாளு மன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இடம் பெற்ற கட்சியின் மத்திய குழு கூட்டத்திற்கு பின்னர் ஊட கங்களுக்குக் கருத்து தெரி விக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

நாங்கள் பத்து நாடாளுமன்ற உறுப்பி னர்களாக முடிவு எடுக்கும்போது அது பல மாக இருக்கும். எந்தவிதமான பிரேரணை கொண்டு வந்தாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக மூன்று கட்சிகளும் கலந்து ரையாடி ஒரு முடிவை எடுக்க வேண்டும் என்றும் மூன்று கட்சிகளும் இணைந்து அப்படி எடுக்க முடியாவிட்டால் நாங்கள் தனியாக தீர்மானிக்க முடியும் என்றும் எங்கள் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

இலங்கை மக்களை மிகப் பெரிய அளவில் பொருளாதார நெருக்கடி பாதித்தி ருக்கின்றது. பொருளாதாரப் பின்னடைவு நிச்சயமாக நீண்டகாலமாக இருந்து வந்த ஒன்று. இந்த நாட்டிலே யுத்தத்திற்காக செலவழிக்கப்பட்ட பெருந் தொகையான நிதி, அதற்காகப் பட்ட கடன்கள், அதனால் ஏற்பட்ட அழிவுகள் எல்லாம் சேர்த்தே பொருளாதார பின்னடைவுக்குக் காரணமாக உள்ளன.

போராட்டத்துக்கு ஜனாதி பதி சரியான பதில் ஒன்றை வழங்க வேண்டும். ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என்று கூறியே மக்கள் போராடுகிறார்கள். அதனை ஜனாதிபதி செய்ய மாட்டார் என்றே நான் நினைக்கின்றேன். பொருளாதாரத்தை முன்னேற்ற ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும். – என்றார். இதேவேளை, இணுவில் பகுதியில் இடம்பெற்ற புளொட் மத்திய குழுக் கூட்டத்தில் அண்மையில் உயிரிழந்த கட்சியின் பொதுச் செயலாளர் அமரர் சு.சதானந்தனின் வெற்றிடத்திற்குத் தற்காலிகமாக ஒருவர் நியமிக்கப்பட்டார்.

மத்திய குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர்களான கஜதீபன், சிவநேசன் உட்பட கட்சியினுடைய உறுப் பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# எரிபொருள் விற்பனையில் கள்ளச் சந்தை முகவர்கள்!

## திடீர் சுற்றிவளைப்புகளில் 68 பேர் கைது

அங்கீகரிக்கப்பட்ட அனுமதிப் பத்திரம் இன்றி எரிபொருள் விற்பனை செய்பவர்கள் தொடர்பாக நாடாளாவிய ரீதியில் சுற்றிவளைப்பு நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

இதுவரை மொத்தம் 68 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும், சந்தேக நபர்களிடம் இருந்து 8,025 லீற்றர் பெற்றோல், 726 லீற்றர் டீசல் மற்றும் மண்ணெண்ணெய் கைப்பற்றப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அதிகப்படியான எரிபொருளைக் கொள்வனவு செய்து வேறு இடங் களில் அதிக விலைக்கு விற்பதன் மூலம் பலர் சட்டவிரோத வியா பாரங்களை ஆரம்பித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து இந்தச் சோதனை முன்னெடுக் கப்பட்டுள்ளது.

கான்கள் மற்றும் பீப்பாய்களில் அதிகப்படியான எரிபொருளை கொள்முதல் செய்து, பின்னர் பொது மக்களுக்கு அதிக விலைக்கு இவர் கள் விற்பனை செய்து வருகின்றனர்.

இந்த மோசடி, வாகனங்கள் மற் றும் அன்றாட நடவடிக்கைகளுக்கு எரிபொருள் கொள்வனவு செய் வதற்கு நீண்டவரிசையில் நிற்கும் பலருக்கும் பாதிப்பை ஏற்படுத்தி யுள்ளது.

எரிபொருளின் தட்டுப்பாடு மற் றும் தொடர்ச்சியான மின்வெட்டு என்பன இவ்வாறான மோசடிகளில் சிலர் ஈடுபடுவதற்குபங்களித்துள்ளன என விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து, சட்டவிரோத எரிபொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட வர்களை கைது செய்வதற்காக நேற்று திடீர் சுற்றிவளைப்பு நடத்தப் பட்டன எனப் பொலிஸார் தெரி வித்தனர்.

பொதுமக்களை ஏமாற்றும் இவ்வாறான நபர்களை கைது செய்ய நாடளாவிய ரீதியில் தொடர்ந்து சோதனைகள் முன்னெ டுக்கப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# அரிசியின் விலையும் எகிறும் உற்பத்தியாளர்கள் விசனம்

எதிர்வரும் காலங்களில் அரிசியின் விலை மேலும் அதிகரிக்கும் என ஐக்கிய அரிசி உற்பத்தியாளர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

எரிபொருள் பிரச்சினையால், சிறுபோகத்தில் திட்டமிட்டவாறு பயிர்ச்செய்கையை மேற்கொள்ள முடியாவிட்டால் அரிசியின் விலை அதிகரிக்கும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எரிபொருள் மற்றும் உரப் பிரச்சினை காரணமாக எதிர்காலத்தில. நெல் தட்டுப்பாடு ஏற்படக்கூடும் எனவும் ஐக்கிய அரிசி உற்பத்தியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, தற்பொழுது நாட்டரிசி ஒரு கிலோ கிராம் 210 முதல் 220 ரூபாவுக்கும் ஒரு கிலோ கிராம் சம்பா அரிசி 230 ரூபாவுக்கும், கீரி சம்பா ஒரு கிலோ கிராம் 270 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கைதடியில் விபத்தில் சிக்கி படுகாயமடைந்தவர் மரணம்

*விபத்தில் சிக்கி படுகாயம டைந்த ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். நுணாவில் கைதடியைச் சேர்ந்த சுப்பர் சுதாகர் (வயது-52) என்பவரே உயிரிழந்த வராவார்.*

*ஞாயிற்றுக்கிழமை கைதடி பாலத்தடியிலிருந்து கைதடிப் பிள்ளையார் கோவிலை நோக்கி சைக்கிளில் சென்று கொண்டிருந்த அவரைப் பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியுள்ளது.*

*இதில் படுகாயம் அடைந்த அவர் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்டிருந்த நிலையில் நேற்றுக் காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள் ளார்.*

*இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தி யசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம் குமார் மரண விசாரணைகளை மேற்கொண்டு, பிரேத பரி சோதனைக்கு உத்தரவிட்டுள் ளார்.*

# 4ஆவது நாளாகவும் காலிமுகத்திடலில் மக்கள் அலை; தொடர்கின்றது கோட்டா அரசுக்கு எதிரான போராட்டம்



எந்தவொரு அரசியல் கட்சிகளின் தலையீடின்றி கடந்த 9ஆம் திகதி காலை முதல் கொழும்பு - காலிமுகத்திடலில் ஒன்றுகூடிய மக்கள் இன்று நான்காவது நாளாகவும் கோட்டாபய அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இடைக்கிடையே மழை பெய்து வருகின்ற போதிலும் ஜனா திபதி செயலகத்தை முற்றுகையிட்டு மக்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், அரசும் பதவி விலக வேண்டும் எனக் கோரி மக்கள் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இதனிடையே, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோருக்கு பலர் தாமாக முன்வந்து உணவு, குடிதண்ணீர் மற்றும் மருந்துப் பொருள்கள் போன்றவற்றை வழங்கி வருகின்றனர்.

இதேவேளை, கோட்டாபய அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாட்டின் பல பகுதிகளிலும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# கோட்டாபயவுக்கு ஆதரவாக கொழும்பில் பிக்குகள் அணி

## தாமரைத் தடாகத்திலிருந்து பேரணி







கொழும்பு,ஏப்ரல் 12

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்து கொழும்புத் தாமரைத் தடாகம் அரங்கத்திற்கு அருகில் இருந்து கொழும்பு கோட்டையை நோக்கி பேரணி ஒன்று நடைபெற்று வருகிறது.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணி பௌத்த பிக்குகளை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்படுகின்றது.

போலியான போராட்டங்கள் என்ற போர்வையில் சிங்கள பௌத்த மக்களின் நிலைப்பாட்டில் கை வைக்க வேண்டாம் என்ற தொனிப் பொருளில் இது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்திற்கு ஆதரவாக பிக்குகள் தலைமையிலான இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்படுகிறது.

இந்தப் பேரணி தற்போது அரச தலைவர் செயலகத்திற்கு அருகில் நடைபெறும் மக்கள் போராட்டத்தை நோக்கிச் செல்வதாக மக்கள் ஆர்ப்பாட்டத்தின் செயற்பாட்டாளர்களில் ஒருவரான உபுல் சாந்த சன்னஸ்கல தெரிவித்துள்ளார்.

பிக்குமார் தலைமையிலான பேரணியினர் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள இடத்தை நோக்கிச் சென்றால், அங்கு மோதலான நிலைமை ஏற்படலாம் எனவும் இன்று பிற்பகலில் அவர் எச்சரித்துள்ளார்.

# கோட்டாபய பக்கம் தாவிய சாந்த பண்டார அனைத்துப் பதவிகளில் இருந்தும் நீக்கம்

## சு.க. அதிரடித் தீர்மானம்



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அனைத் துப் பதவிகளில் இருந்தும் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார நீக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி முன்னிலையில் நேற்று விவசாயத்துறை இராஜாங்க அமைச்சராகப் பதவியேற்றுக் கட்சியின் கொள்கைகளுக்குத் துரோகம் இழைத்துள்ளார் என்று அவர் மீது சுதந்திரக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்நிலையில், அவர் கட்சியின் ஊடகப் பேச்சாளர் உள்ளிட்ட அனைத்துப் பதவிகளில் இருந்தும் நீக்கப்பட்டுள்ளார் என்று சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் துமிந்த திஸா நாயக்க எம்.பி. தெரிவித்துள்ளார்.

# யாழ். நவாலியில் ஓட்டோ தீக்கிரை!

## வன்முறைக் கும்பல் அட்டகாசம்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவாலிப் பகுதியில் ஓட்டோ ஒன்று வன்முறைக் கும்பலால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. நவாலி, ஆனந்தா வீதி பகுதியிலுள்ள வீடொன்றினுள் நேற்றிரவு இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த 6 பேர் கொண்ட வன்முறைக் கும்பல் ஒன்று வீட்டின் முன் நிறுத்திவைக்கப்பட்டிருந்த ஓட்டோவை அடித்து நொறுக்கிவிட்டு அதற்குத் தீ வைத்த பின்னர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# தம்பதியினர் படுகொலை!

தம்பதியினர் கூரிய ஆயுதத்தால் தாக்கிப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு இன்று காலை தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் கொடக்க வெல - பல்லேபெத்த பகுதியில் நேற்றிரவு இடம்பெற்றுள்ளது.

இன்று காலை மீட்கப்பட்ட சடலங்கள் குறித்த பகுதியிலேயே பொலிஸ்பாதுகாப்பின்கீழ்வைக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடக்கவெல பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# கற்றாழைச் செடிகளை கடத்தி வந்த பயணி!







கட்டுநாயக்க விமான நிலையத்தில் வெளிநாடு ஒன்றிலிருந்து கொண்டுவரப்பட்ட அரியவகை பொருள்களை சுங்கப்பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

தாய்லாந்தின் பாங்கொக்கில் இருந்து வந்த இலங்கைப் பயணி ஒருவரின் இரண்டு பயணப் பொதிகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 202 கற்றாழைச் செடிகள் மற்றும் 6 செல்ல மீன்களையே இலங்கை சுங்கப் பிரிவினர் கைப்பறியுள்ளனர் என கட்டுநாயக்க விமான நிலைய சுங்கப் பிரதிப் பணிப்பாளர் சுதத் சில்வா தெரிவித்துள்ளார்.

செடிகள் மற்றும் மீன்களின் பெறுமதி 117,500 ரூபா எனவும், பொருள்களை சுங்கப் பிரிவினர் பறிமுதல் செய்து சந்தேகநபருக்கு அபராதம் விதித்துள்ளனர் எனவும் சுங்கப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

# தெரிவுக்குழு அமைக்க கோருகின்றது ஐ.தே.க.



சர்வதேசக் கடனை திருப்பிச் செலுத்தாமை மற்றும் பண மதிப்பிழப்பு விவகாரம் தொடர்பில் ஆராய தெரிவுக் குழு ஒன்றை நியமிக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை, சுதந்திரத்தின் பின்னர் கடனை திருப்பிச் செலுத்துவதில் கறைபடாத சாதனையை இலங்கை பேணி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து வெளிநாட்டுக் கடன்களும் திருப்பிச் செலுத்தப்படமாட்டாது என அரசாங்கம் இப்போது அறிவித்துள்ளமைக்கு வருந்துவதாகவும் குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 11,000 மெ. தொன் அரிசியுடன் வந்தது சென் குளோரி கப்பல்

இந்திய அரசாங்கத்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட 11,000 மெற்றிக் தொன் அரிசியை ஏற்றிக்கொண்டு கப்பல் ஒன்று நாட்டை வந்தடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அரிசியுடன் சென் குளோரி என்ற கப்பல் நேற்று கொழும்பை வந்தடைந்ததாக இலங்கைக்கான இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கையுடனான பலதரப்பு ஒத்துழைப்பின் கீழ் இந்தியா கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 16,000 மெற்றிக் தொன் அரிசியை இலங்கைக்கு வழங்கியுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான தனித்துவமான உறவைப் பிரதிபலிக்கும் வகையில் இந்த உதவிகளை இந்திய அரசாங்கம் தொடர்ந்து வழங்கும் என இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இந்தியாவினால் எரிபொருள் உள்ளிட்ட பொருள்களின் விநியோகம் ஊடாக இலங்கைக்கு உதவிகளை வழங்கியுள்ள நிலையில் கடன் வசதியின் கீழ் இந்தியா இதுவரை இரண்டுலட்சத்து 70 ஆயிரம் மெற்றிக் தொன் எரிபொருளை பெற்றுக் கொடுத்துள்ளது.

# தமிழகத்துக்குத் தப்பிச் செல்வோரைத் தடுக்க மன்னாரில் கடற்படையினர் தீவிர கண்காணிப்பு

(ந.லோகதயாளன்)

இலங்கையில் இருந்து இந்தியாவுக்குத் தப்பிச் செல்வோரைத் தடுப்பதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகளை மன்னாரில் கடற்படையினர் மற்றும் இராணுவத்தினர் தீவிரப்படுத்தியுள்ளனர்.

இலங்கையில் நிலவும் கடும் பொருளாதார நெருக்கடி காரணமாகப் பொருள்களைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை மற்றும் வருமானம் இன்மை காரணமாகப் பலரும் தமிழகத்துக்குத் தப்பியோடி வருகின்றனர். இதன் காரணமாக இராஜதந்திர ரீதியில் அழுத்தங்கள் அதிகமாகக் காணப்படும் என்பதால் தமிழகத்துக்குத் தப்பியோடுவோரைத் தடுப்பதில் அரசு அதிக கவனம் செலுத்தி வருகின்றது.

கடந்த மார்ச் மாதம் 22ஆம் திகதிக்குப் பின்பு இலங்கையில் இருந்து 39 பேர் தமிழகத்துக்கு அகதிகளாகத் தப்பிச் சென்றுள்ளமையால் அதனைத் தடுக்க கடற்படையினர் மற்றும் இராணுவத்தினர் மன்னார் மாவட்டத்தின் கரையோரப் பகுதிகளில் தமது கண்காணிப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தி வருகின்றனர்.

இதற்காகக் கடந்த இரு தினங்களுக்கு முன்னர் கடற்படையினரின் அதிகாரிகள் கூட்டம் நடத்திய அதே நேரம் இராணுவ அதிகாரிகளும் சந்திப்பை மேற்கொண்டனர்.

# மகனைத் தேடி அலைந்த மற்றொரு தந்தை மரணம்



இறுதி யுத்தத்தின் போது காணாமல்போன தனது மகனை 12 ஆண்டுகளுக்கு மேலாகத் தேடி வந்த தந்தையொருவர் முல்லைத்தீவு மாவட்டத்தில் உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு முள்ளியவளை பூதன்வயல் கிராமத்தைச் சேர்ந்த முனியாண்டி கறுப்பையா என்பவர், கடந்தகால யுத்தத்தின்போது தனது மகனான மோகன தாஸ் என்பவர் காணாமல் போன நிலையில் அவரைத் தேடித் தவித்து வந்துள்ளார்.

இந்நிலையில் தந்தை நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

வடக்கு கிழக்கு பகுதிகளில் காணாமல் போன தமது பிள்ளைகளை தேடி அலையும் பெற்றோர்கள் பலர், பிள்ளைகளை தேடி அலைந்து கிடைக்காத நிலையில் ஏக்கத்துடன் உயிரிழந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இடைக்கால அரசு அமைக்கும் முயற்சி இடையில் முறிந்தது?

இடைக்கால அரசு அமைப்பது தொடர்பாக ஜனாதிபதியுடன் நேற்று நடைபெறவிருந்த கலந்துரையாடலைப் புறக்கணிக்க அரசாங்கத்தில் இருந்து அண்மையில் விலகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு தீர்மானித்தது எனத் தெரிவிக்கப்படுகிறது.

விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் உட்பட்ட 11 கட்சிக்குழு, சுதந்திரக் கட்சியினர், அனுர பிரியதர்ஷன தலைமையிலான சுயாதீன அணியினர் என 41 எம்.பிக்களைக் கொண்ட குழுவே நேற்று ஜனாதிபதியைச் சந்திக்க இருந்தது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இராஜாங்க அமைச்சர்களாக அரசு உள்வாங்கிக் கொண்டமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

# படகு விபத்தில் காணாமல்போன கடற்படைச் சிப்பாய் சடலமாக மீட்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஏப். 13

யாழ்., காரைநகர் கடல் பகுதியில் கடத்தல் படகுகளை விரட்டிய கடற்படையினரின் இரு படகுகள் மோதியதில் காணாமல்போன கடற்படைச் சிப்பாய் நேற்று சடலமாக மீட்கப்பட்டார்.

காரைநகர் கடற்பரப்பில் சந்தேகத்துக்கிடமான படகை நேற்று விரட்டிய வேளை விபத்துக்குள்ளான படகில் இருந்து 4 கடற்படையினர் கடலில் தவறி வீழ்ந்த போது ஒருவர் காணாமல்போயிருந்தார்.

இவ்வாறு காணாமல்போன கடற்படைச்சிப்பாயைத் தேடும் பணி தொடர்ந்த நிலையில் அவர் நேற்று உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.


சடலம் காங்கேசன்துறை கடற்படைத் தளம் ஊடாக பிரேத பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டுள்ளது.



# எரிவாயு சிலிண்டர் கோரி கராப்பிட்டியில் வழிமறிப்பு

காலி வீதியில் எரிவாயு சிலிண்டர் விநியோகிக்கக் கோரி பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக காலி – மாபலகம வீதி, கராப்பிட்டி சந்தி முற்றாகத் தடைப்பட்டது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் சமையல் எரிவாயு சிலிண்டர் கோரி வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என நேற்று மாலை அங்கிருந்து செய்தியாளர் தெரிவித்தார்.



# கிளிநொச்சியில்
# ஐஸ்வர்யம் பெருவிருந்து மண்டபம்
# Ishwaryam Banquet Hall



**Tel:- 021 228 3701, 076 306 8091**

**Whatsapp:- 071 7736 4308**

**No.315, Kandy Road,
Kilinochchi**




சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL
## BANQUET MEALS HALL





## FULL OPTION

### MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

### DESSERT

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

**SPECIAL MENU PACKAGE**

### BEVERAGES

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551A கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.04.2022இல் வெளியிடப்பெற்றது.